# இந்தியப் பொருளாக்கமும் காந்தீய நோக்கமும்.

ஆசிரியர்.

டாக்டர்: J. C. குமரப்பா

காரியதரிசி

வார்தா அகில இந்திய கிராம கைத்தொழில் சங்கம்.

தமிழாக்கம்.

திரு: T. P. ஜெகந்நாதன்



பிரசுரம்:-

**பாரதி மறுமலர்ச்சி நிலையம்.**

வேலூர் (சேலம்)

1948 விலை 12 அணா ஏப்ரல்-மீ

பாரதி மறுமலர்ச்சி மலர்.

# இந்தியப் பொருளாக்கமும் காந்தீய நோக்கமும்

ஆசிரியர்

பேராசிரியர் **J. C.** குமரப்பா

காரியதரிசி

வார்தா அகில இந்திய கிராம கைத்தொழில் சங்கம்

தமிழாக்கியவர்

திரு **T. P.** ஜெகந்நாதன்

நிர்வாகி

பாரதி மறுமலர்ச்சி நிலையம்

வேலூர் (சேலம்)

ஜெய் ஹிந்த்

# பதிப்புரை

வாழ்விலும், வழக்கிலும், நூலிலும் வகுத்து அன்பைக் கூறினர் வள்ளுவனர். அஹிம்சை அஹிம்சை என்று அதனையே அளவு கூவுகிறார் அன்பாகக் காந்தி அடிகள். ஆனல் இம்சை இம்சை என்ற எதிரொலியே எங்கும் மதி மயங்க ஒலிக்கின்றது. உலக முழுதும் கொடுமையில் உழலுகின்றது. எண்ணத்தில் கொடுமை, எங்கும் கொடுமை, எல்லாம் கொடுமை. ஆனல் நாம் விரும்புவதோ உரிமை, பேசுவதோ அமைதி எழுதுவதோ ஒற்றுமை எவ்விதம் வரும்.

அறத்தினுல் மலரும் வெற்றியே அழியா அமைதி தரும். பகைவனின் நெஞ்சிலும் உண்மை அமைதியைப் பரவச்செய்யும் 'வேலன்றிவென்றிதருவது மன்னவன், கோலதூஉம் கோடாதெனின்,'' என்ற பொய்யாமொழிபோல் வேலில்லாமலே படைகள் வெற்றிபெற்றுவிடலாம். எங்கு? எப்போது? அறம், முறை, செங்கோல் இருந்தால்.

''தீய வைதீய பயத்தலால், தீயினும் அஞ்சப்படும்'' என்ற தமிழ்மறைபோல் நெறியற்றபோதுதான் படை தேவையாகின்றது. அறமிருந்தால் படை தேவையில்லை ஒற்றுமை, அமைதி, உரிமை, வெற்றி, மகிழ்ச்சி முதலிய அனைத்தும் வரும். நிலைத்த அமைதியைக் கொண்டுவருவது வாழ்விப்பது அன்பு, அறம் அதைத்தான் அஹிம்சை என்கிறார் மகாத்மாஜி அத்தத்துவத்தின் மூலம் சறுக்கிவீழ்ந்த சமுதாயத்தை சரிசெய்யும் குறிக்கோள் கொண்டது இச் சிறு நூல்

பொருளாதாரப் பேராசிரியரான இச்சிறு நூல் ஆசிரியர் தனது மேல்நாட்டுச் சுற்றுப்பிரயாணத்தில் மேல்நாட்டு தொழில் பிரச்னைகளான யந்திர உற்பத்தி, சந்தைக்கட்டுப் பாடுகள், மூலப்பொருள்கள் முதலியவைகளை ஆய்ந்துபார்த்த பின் லாபத்தையே கண்ணுயுள்ள மேல்நாட்டு யந்திரக் கைத் தொழில் முறைகளேதான் கடந்த யுத்தங்களுக்குக் காரணம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார். ஏசுவின் உண்மைச்சீடரும், காந்திய திட்டத்தில் திடநம்பிக்கையுள்ளவருமான இவர் கீழ் நாட்டுக்கு ஏற்ற அஹிம்சையை அடிப்படையாகக்கொண்ட புதிய முறையை எடுத்துக்காட்டியிருக்கிறார்.

14—1—48
வேலூர் சேலம்

T. P. ஜெகந்நாதன்,
பதிப்பாளன்.

## நிரந்தரப் பொருளாக்கம்

மனிதன் தன் தேவைகளை பூர்த்திசெய்துகொள்ள எடுத்துக்கொண்ட முயற்சிகள் சரித்திரம்போல் அவ்வளவு பழமையானது. ஆனல் அதைப்பற்றிய முறையான ஆராய்ச்சி சமீபகாலத்திலேதான் உதித்தது. இந்தியாவில் சில ஆயிர ஆண்டுகட்கு முன்னதாகவே இந்துசமூக அமைப்பின் துவக்கத்திலேயே சாஸ்திரீயமுறையில் பொருளாக்கத் தத்துவங்கள் கையாளப்பட்டிருக்கின்றது.

மேல் நாடுகளில் முக்கியமாக இங்கிலாந்தில் சுமார் நூற்றைம்பது ஆண்டுகட்குமுன் ஆதம்ஸ்மித் காலத்திலிருந்துதான் பொருளாதாரத் தத்துவங்கள் நிருவப்பட்டது. அதன்பிறகு இதுசம்பந்தமாக கணக்கற்ற நூல்கள் வெளிவந்திருக்கின்றன. மானிட அபிலாஷைகளைப்பற்றிய ஒரு முக்கிய நூலாக இருந்தபோதிலும் முக்கியமாக இங்கிலாந்தில் பேராசிரியர்கள் விஞ்ஞானத்தை ஆராய்ச்சிமுறையில் இதை அணுகிஞர்கள். மனிதத்தன்மைகளைக் கவர்ச்சிமிக்க மனோதத்துவ ஆராய்ச்சிமுறையைப்போல் அன்றி வெறும் கணித சாஸ்திர முறையில் திரு மார்ஷல். பிகோ முதலியவர்கள் எழுதத்துடங்கிவிட்டார்கள். அவ்வித முறைகளை நாம் கைக்கொள்ளாமல் அதை மனித நோக்குடன் அடைவோம். இவ்வழியில் மனித எத்தனங்களின் வகுப்பை கீழ்க்கண்டவாறு பிரிப்போம்.

### பறிமுதல் பொருளாக்கம்.

ஒருவன் தன் தேவைகளை பூர்த்திசெய்துகொள்வதில் மிக எளியமுறை எதையும் தான் செய்ய முயற்சிக்காமல் இயற்கையாக தன்முன் இருப்பவைகளில் ஒன்றைக்கொண்டு தன் தேவைகளை அடைவது. வேட்டையாடுதல், மீன்பிடித்தல், சுரங்கங்களிலிருந்து உலோகப்பொருள்களை எடுத்தல் ஆகியவைகள் இவ்வகையைச் சேர்ந்தது. தன் உரிமை அல்லது கடமை ஆகிய ஒன்றையும் சிறிதளவுகூட கவனிக்காமல் சுயதேவையைப் பூர்த்திசெய்துகொள்வது என்ற ஒரு நினைப்புடன் செய்துகொள்வது. இது மிக்க கேவலமான முறை. பொருளாதாரத் தத்துவமுறையில் மிருகங்களின் வாழ்க்கையை நோக்கும்பொழுது மிருகவர்க்கங்கள் இந்த இனத்தைச் சேர்ந்தது என்பதை நாம் காணலாம். ஒருவர் எவ்வித உழைப்பும் இல்லாமல் பலனடையக்கருதுவது மனிதனை மிருகவாழ்க்கைக்கு இழுக்கும்.

## முயற்சிப்பொருளாக்கம்.

ஒருவன் தன்னுடைய உரிமைகளை உபயோகிப்பது
அடுத்த நிலை ஒரு மனிதன் சில திறமைகளைப்பெற்று இருக்
கின்றான். அவன் அதைத் தன் சுயநலத்திற்காகவே உப
யோகப்படுத்துகிறான். பிறர் அதைப்பெருவதில் பொறுமை
யும், தன் காரியத்தில் வேறு எவரும் குறிக்கிடாமலும் பார்த்
துக்கொள்கிறான். மனிதவாழ்க்கையின் முதல்படி இது
தான் மனிதன் தன் தேவைப்பொருள்களை உற்பத்திசெய்
துகொண்டும் தனக்கென்றும் அவைகளை வைத்துக்கொள்கி
றான். இந்த முறையின் பயனாகவே முதலாளித்துவ மன
பான்மை, அரசாங்கத்தின் கட்டுப்பாடு, அதிகாரவிதிகள் மு
லியவற்றிற்கு கட்டுப்பட்டு நடக்கும், செய்தால் செய்துகொ
ளட்டும் என்றபோக்கு ஏற்பட்டிருக்கின்றது ஐரோப்பா
லும், அமெரிக்காவிலும் சென்ற ஒரு நூற்றாண்டாக இவ்வி
வாழ்க்கையைப்பற்றிய சுயநலத்தன்மையின்கீழ் தொழி
கள் சிக்கிக்கொண்டு இருக்கின்றன. ஒவ்வொருவரும் தன
கென்று பற்றிக்கொள்வதும் கடைசியில் வருபவன் க
என்ன ஆனாலும் ஆகட்டும் என்ற நிலைமை இது தன்னை ம
டும் திருப்திசெய்துகொள்ளக்கூடிய குறுக்குப்பாதை. எ
லோரும் சேர்ந்து செல்லக்கூடிய நேரான வழியல்ல.

## கூட்டுறவுப்பொருளாக்கம்.

மனிதனுடைய அறிவு பெருகி ஒவ்வொருவரும்
தனக்கென்று வாழ்வதுமட்டும் முறையல்ல என்ற உணர்ச்சி
ஏற்பட்டு இதரமனிதர்களுடன் நட்புஏற்பட்டதும் மக்களுக்
ஐக்கிய உணர்ச்சி ஏற்படுகிறது இதிலும்கூட கூடும்வகை
யில் சில பேதங்கள் இருக்கின்றது.

### (அ) ஏகாதிபத்தியம்:—

கூடும் இனத்தில் மிகச்சாதாரணமான கூட்டத்தா
ரின் நன்மைக்கென்று கூடுவது. சுயநலநோக்குடன்சேரு
உற்பத்தியாளர்களின் விலைநிர்ணய சங்கங்கள், விலை
உயர்த்த ஏற்படுத்தப்பட்ட வியாபாரிகள் கழகங்கள், டிரஸ்ட்
கள், வியாபாரிகளின் சில விசேட உரிமைகளுக்கு ஏற்படுத்
திய கழகங்கள் இவ்வகையைச் சேர்ந்தவை. இப்பிரிவில்
கூடுபவர்களுக்கு பறிமுதல் பொருளாக்க உணர்ச்சி (வேட்
டை இன உணர்ச்சி) இருப்பின் அவ்வுணர்ச்சி ஏகாதிபத்திய

மாகமாறி ஒருசாராரின் உழைப்பையும், சக்தியையும் தங்கள் வர்க்கத்தினரின் நன்மைக்கு என்று ஏற்படுத்திக்கொள்ளும் இந்த முறையும் சுயநலமே முக்கிய கொள்கையாக அமைந்து தனது கடமையை ஒதுக்கித்தள்ளிவிட்டு தன் உரிமையை மாத்திரம் கவனிக்கும் இது தன் வகுப்பினரின் நலத்திற்கு மற்றவர்களை உபயோகித்துக்கொள்ளும்.

(ஆ) முதலாளித்துவம், சர்வாதிகாரத்துவம், பொதுவுடைமை, அபேதவாதம், தத்துவஉணர்வு, சமூகஉணர்வு, பொருளாக்க உணர்வு முதலிய பொது எண்ணங்கள், நலன்கள் அல்லது முடிவுகளை ஒரே வகையின்தாகக்கொண்ட பல திறப்பட்ட மக்கள் ஒன்றாகக்கூடினல் அவர்கள் தங்களுடைய பொதுநலத்திற்கோ அல்லது தங்களுடைய கொள்கைகளின் வெற்றிக்காகவோ சேர்ந்து முயற்சிக்கிறார்கள். இதில் தனது கடமையைப்பற்றிய சிந்தனை ஓர் அளவு இருக்கின்றது. ஆனல் அது தமது இனத்தைச் சேர்ந்தவர்களிடமே இருக்கிறதுடன் மற்ற இனங்களுக்கு எதிராக தங்கள் இனம் வெற்றிபெறவேண்டும் என்ற உணர்ச்சி அதிகமாக இருக்கின்றது இந்த நூற்றாண்டில் இந்த முறையினல் பலவிதமான சமூகஅமைப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் ஒன்றுக்கொன்று சிறு சிறு மாறுதல்களுடன் இருக்கின்றன ஆனல் அடிப்படைத்தத்துவங்கள் ஒன்றாகவே இருக்கின்றது. இம்முறையில் ஏகாதிபத்தியத்தில் இருப்பதைவிட கொள்ளையிடுதல் (பறிமுதல்) என்பது குறைவாகவே இருக்கிறதாயினும் இம்முறை தீவிரமான நாட்டுப்பற்றை (தேசீய உணர்வை) ஏற்படுத்திவிடுகிறது. மனிதனுடைய உயர்ந்த கலைப்பண்பு, மேன்மை முதலானவை புறக்கணிக்கப்பட்டு சரீர சுகங்கள் மாத்திரமே கவனிக்கப்படுகின்றன. இன்னும் தங்கள் சமூகமும் இதர சமூகங்களும் எவ்வாறு ஒன்றுக்கொன்று நடந்துகொள்ளவேண்டும் என்பதைப்பற்றி அவர் சிந்திப்பதே இல்லை.

## நிரந்தரப் பொருளாக்கம்.

இதுவரை நாம் கூறிவந்த பொருளாக்கமுறைகளை எல்லாம் மாறும்தன்மை உடைய பொருளாக்கம் எனக்கூறலாம் ஏனென்றால் அவைகள் ஒரு மனிதன் அல்லது ஒரு இனம் அல்லது ஒரு தேசத்தின் குறுகிய ஆயுட்காலம் வரையே இருப்பவை. நாம் நிரந்தரமாக இருக்கும்

முறையை ஏற்படுத்த நினைத்தால் நிரந்தர உண்மைகளை அவைகளுக்கு அடிப்படையாகவைத்து ஏற்படுத்தவேண்டும். நாம் உரிமைகளை மாத்திரம் பிரதானமாகக் கருதும்போது நம்வாழ்க்கை சுயநலம் கொண்டதாகவும், நாமே அழிவைத் தேடிக்கொண்டதானதுமாகும் நம் கடமைகளைக் கருதினோமானால் நமக்குள் ஒருவர் வாழ்க்கைக்கும் பிறர் வாழ்க்கைக்கும் இருக்கும் சம்பந்தத்தைக்கொண்டு நம்வாழ்க்கைக்கு மதிப்பு உண்டாகும். அதனால் நிலையான தன்மை ஏற்படும். கடவுள் படைப்பில் மனிதன் ஒரு பகுதி. இவன் தன்னைச் சூழ்ந்துள்ள இதர சீவராசிகளிடம் கொண்டுள்ள அன்பின்மூலம் இவன் இறுதியில் இறைவனிடம் ஐக்கியமாக வேண்டியவன் அவன் பிறவி எடுத்ததின் நோக்கம் அவனது அற்ப ஆயுளை சுயநலத்திற்காகவும், சுகமாகக் காலங் கழிப்பதற்காகவும் அல்ல உலகோடு தன் அற்ப ஆயுளை ஒப்பிட்டு தீங்கையே இந்த அற்ப மனிதனையும் தாங்கள் ஏன் பாதுகாத்து வருகின்றீர் என்று கேட்கவேண்டியவன் இவ்வுலகில் நமக்கு எப்பொழுதும் தங்கியிருக்க இடமில்லை. நாம் எல்லோரும் பிரயாணிகளாய் வந்து போகிறவர்கள்.

மகாத்மாஜி கடவுள் படைப்பைப்பற்றி இவ்விதக் கருத்தோடு இருப்பதால்தான் மனிதவாழ்வில் ஏற்படும் பெரும் விபத்துக்களுக்கு எல்லாம் காரணம் மனிதர் ஆண்டவன் ஆணையை மீறி பாவம் செய்வது என்கிறார். கடவுள் கட்டளைப்படி நடப்பதென்றால் மனிதன் செய்யக்கூடிய செயல்களுக்கு வழிகாட்டியாக அவனுக்கு கடமை என்ற ஒன்றுதான் இருக்கும். அழிவற்றதற்கு வழி கடமை என்பதுதான்.

நாம் பொருளாக்கத்தின் அடிப்படை சித்தாந்தங்களை ஏற்படுத்தும்பொழுது மனிதன் அற்ப ஆயுள்காலத்தையும் பிரம்ம கால அளவையும் உணர்ந்து நமது விதிகளை ஏற்படுத்தவேண்டும். இவ்வித மனப்பான்மை இருந்து ஏற்படுத்தினால்தான் மனித சமூகத்தில் முன்னேற்றமும் நலமும் ஏற்பட்டு காளடவில் பண்பும் நாகரீகமும் வளர்ந்து சாந்தி நிறைந்த வாழ்க்கை ஏற்படும். ஆகையால் நாம் தற்காலத்தில் இருக்கும் நமது தேவைக்கு என்று பொருளாக்கவிதிகளை ஏற்படுத்தாமல் என்றும் நிரந்தரமாக இருக்கும் நியாயமான விதிகளின் ஆதாரத்தின்மேல் அவைகளை ஏற்படுத்த வேண்டும்

இம்மாதிரி பொருளாதார முயற்சிமுறையில் இயற்றையாகக் கிடைக்கும் பொருள்களை மிகச் சிக்கனமாகச் செலவுசெய்யவேண்டும். இருப்பதை எல்லாம் நிறையப் பற்றிக்கொள்வோம் என்ற நோக்கத்தை விட்டு மனித உழைப்பின்மூலம் எவ்வளவு உற்பத்தி செய்ய இயலுமோ அதற்குத் தகுந்தமாதிரி செலவு என்று ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். இம்மாதிரி செய்யப்புகின் செலவழிக்கும் முறையைப் பற்றிய கருத்து ஏற்படும் மேல்நாட்டில் தற்காலத்தில் மிக "ஏற்றது'' என்று கைக்கொள்ளும் வகைக்கும் நாம் மேலே கூறியுள்ள அமைப்புக்கும் அதிக வித்தியாசம் இருக்கும்.

இரும்பைச் சிக்கனமாக செலவழிக்கவேண்டிவரும். ஏனெனில் காலப்போக்கில் சுரங்கங்களில் மூலப்பொருள்கள் குறைந்து தீர்ந்துபோகும். கூடுமானவரையில் நமது தேவைகள் எல்லாம் மனிதர் உழைப்பைக்கொண்டே பெறக்கூடியதாய் இருக்கவேண்டும் கவனமாகத் திட்டமிட்டு மரங்களைப் பயிரிட்டு காடுகளை வளப்பதனால் நமக்கு எப்போதும் மரம் கிடைக்கும்படி செய்துகொள்ளலாம். தற்கால உலகவாழ்க்கை இரும்பையும் எஃகையும் கொண்டு வாழுகின்றது. நமக்கு இருக்கும் இயற்கைச் சொத்துக்களை தாறுமாறாக செலவழித்து விரயப்படுத்தக்கூடாது செங்கல் சுண்ணாம்பு சிமெண்டு மரம் முதலியவை நிரந்தரப் பொருளாக்கவகையைச் சேர்ந்தவை. இரும்புச்சட்ட வீடுகளும் எஃகுக் கதவுகளும் பீரோக்களும் நிலையற்ற பொருளாதாரப் பொருள்கள் இந்தியாவின் மண்குடிசைகள் நிரந்தரமானவை என்பது ஆச்சரியமாக இருக்கும். ஆனால் அமெரிக்காவின் ஆகாயமளாவிய அறுபது அடுக்கு மாளிகைகள் இரும்புகொண்டு கட்டப்பட்டு இருப்பினும் அவைகள் நிலையற்ற பொருளாதாரத்தின்சின்னம் இதேவிதம் மனிதன் தன் இதரவிஷயங்களிலும் தன் உழைப்பை நம்பி இருப்பதே நன்மையாகும். இயற்கையின் ஏராளமான செல்வத்தைக் கண்டு நம்பி ஏமார்ந்துவிடக்கூடாது. இவ்விதம் இருப்பது வாழ்க்கைத் துறைகளில் புதுமைக்குணத்தை உண்டாக்கும்.

பிரத்தியேக வாழ்க்கையில்கூட நிரந்தர பொருளாக்கமுயற்சிமுறையில் தன்னடக்கமும் முன்றறிவும் அதிகம் தேவையாக இருக்கிறது. அவசரத் தேவைகளின்மேல் பரந்த நோக்கம் குறிக்கொண்ட கருத்து அதிகமாகும் ஒரு குடும்பம் தகப்பனுடைய சம்பாத்தியத்திலிருந்து கொஞ்சம் வருமானம் அடையலாம். இந்த வருமானத்தை அவர்கள்

உயர்ந்த வாழ்க்கைக்காக ஆடம்பரச் செலவுகள் (விலையுயர்ந்த ஆடைகள் மோட்டார்கள், வேலையாள் முதலியவை) செய்யலாம். அன்றி அவர்கள் தங்கள் ஆடம்பரச் செலவுகளை எல்லாம் குறைத்துக்கொண்டு லேவாதேவியிலும், வியாபாரத்திலும் வருமானத்தை இடலாம். அல்லது அவர்கள் ஒரு குறிப்பட்ட தொகையை சத்துணவு, நல்லுடைகள் வீட்டைச்சுற்றிலும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்துக் கொள்ளுதல் முதலிய நாகரீக காரியங்களில் செலவிடலாம். மேற்கூறிய மூன்று முறைகளிலும் செலவு மதிப்பு விகிதம் வித்தியாசப்படுகின்றது. முதல் பிரிவில் தன்முன் இருப்பவைகளைப்பெற்று ஆனந்திப்பதும் வருமானம் நின்றதும் குழந்தைகள் நிராதாரவாய்விடப்படுகின்றனர். சில சமயங்களில் இளமையில் அதிக சுகவாசியாய் இருந்ததினால் சரீர சுகமோ நடத்தையோ சரியாக இருப்பதில்லை. இரண்டாவதில் பணம் பெருகி சேமிக்கப்பட்டு பெற்றோர்கள் சுகவாழ்க்கைநடத்தலாம். மற்றும் அவர்கள் அச்சொத்தை ஆடம்பரச்செலவு செய்யாமல் இருந்தால் அவர்களுடைய பிள்ளைகள் வேலையில்லாமல் காலந்தள்ளுவதற்கு போதுமானது. மூன்றாவதில் ஒவ்வொருவரின் திறமை வளர்வதற்கு போதியவசதிகள் நிறைந்ததாக குடும்பம் அமைந்திருக்கின்றது. அவர்கள் முதல்வகையினரைப்போல் வாழ்க்கையோ அல்லது இரண்டாந்தரத்தினரைப்போன்று சிரமமில்லாத வருமானமோ (சம்பாதிக்காத சொத்தோ) பெறமுடியாது. ஆனால்அவர்கள் சொத்துரிமை எல்லாம் கல்வியில் திறனும் நடத்தை நாகரீகத்தில் மேம்பாடுமே ஆகும்.

தினசரி குடும்பவாழ்க்கை நாட்டு நடப்புக்களில் (தேசிய காரியங்களில்) சம்பந்தப்பட்டிருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது, ஏகாதிபத்தியம் இன்றும் இருந்தபோதிலும்கூட அது வேட்டை இனத்தை (பரிமுகல் இனத்தைச்) சேர்ந்ததே. அது கொடுமையையும் கொள்ளைக்கூட்டத்தாரையும் குறைக்கிறது. ஆனாலும் அது தீய வழியில் அடைந்த செல்வத்தின் குணம் (சக்தி) அழிவையே தேடித்தரும். அது மக்கள் சமுதாய முழுமைக்கும் அழிவைத் தரக்கூடியது. ஆகையால் அது குறுகியநோக்கம்கொண்டது அது தனிப்பட்டவர்களைக்கொண்ட ஒரு சிறு வர்க்கத்தாரின் வாழ்க்கை நலன்களுக்காக மற்றவர்கள்மேல் ஒழுங்கற்ற முறைகளை உபயோகிக்கக் கருதுகிறது.

முதலாளித்துவம் பொதுநலத்தை மறக்கச்செய்து எல்லாவற்றையும்விட மேலாக தனிப்பட்ட சிலரின் தன்னலத்தையே கருதுகிறது.

பலவித சமதர்ம முறைகள் சிலவர்க்கங்கள் அல்லது சமூகங்களின் சுகத்தை மட்டும் கருதுவதால் பொருள்களின் நிரந்தர மதிப்பை மறுக்கவோ அல்லது மேல்போக்காகவோ கருதுகிறது. அவை அனைத்தும் எல்லாவகையிலும் வாழ்க்கைவசதிகளையே காப்பாற்ற முயல்கிறது.

உலகத்திலுள்ள பொருள்கள் அழியக்கூடியதென்றும் நம்முடைய வாழ்க்கை நமது மரணத்துடன் முடிந்துவிடவில்லையென்றும், அறிவு ஏற்படுமானல் தேசத்தின் எல்லா விஷயங்களையும் ஒரு நிரந்தரமான புதுத்திட்டம்கொண்டு நம்மைப் பார்க்கும்படி தூண்டும். இவ்வித நிரந்தரமான ஒரு அமைப்பு ஏற்படுத்த நமது பண்டைய சமூகத்தில் முயற்சி ஒன்று இருந்தது நமக்கு தெரியவருகின்றது. வேட்டை இன ஐரோப்பிய அமைப்பில் முதல் இடம் அச்சமூக வாழ்க்கைக்கு பிரதானமானவைகளான பட்டாளம் கடற்படை முதலியவைகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. (இங்கிலாந்தில் அதன் அமைப்புக்கு ஏற்றவாறு கடற்படைக்கு முதல் இடம்) இந்து சமூகத்திலோ உண்மைகளுக்கு (லக்ஷியங்களுக்கு) தகுந்த கௌரவம் கொடுக்கப்பட்டிருந்தது.

**முதலாவது:—** தான் எந்த நன்மையையும் கருதாதது தூயமுறையில் சேவைசெய்யும் நாட்டங்கொண்டவர்கள்—பிராமணர்கள்.

**இரண்டாவது:—** தன் கஷ்டநஷ்டங்களைச் சிறிதும் பொருட்படுத்தாது எல்லா வகையிலும் பணிபுரியும் பாண்மை படைத்தவர் க்ஷத்திரியர்கள்

**மூன்றாவது:—** பிறர் நன்மையில் கருத்துக்கொண்டும் ஆனல் தன் லாபத்தையே பிரதானமாகக்கருதி தொண்டுபுரிபவர்கள்—வைசியர்கள்.

**நான்காவது:—** மிருகங்களைப்போல் தன்னலத்தையே பிரதானமாகக்கருதி வாழ்பவர்கள்—சூத்திரர்கள்.

இந்தவிதமான அமைப்பில் சுயலாபத்திற்கென்று அதிகமாக உழைப்பதற்கோ அல்லது விலையை உயர்த்தியோ தாழ்த்தியோ சந்தையைக்கட்டுப்படுத்த இடமில்லை. பொருள் விநியோகத்திலும், மக்கள் நலனிலுமே கருத்துக்கொண்டதாகவும் செல்வவிருத்தியில் நோக்கமற்றும் இருக்கும். நாம் கருதுவது தனிப்பட்டவர் நலமோ அல்லது ஒரு இனத்தாரின் நலமோ அல்ல, மானிடசமுதாயம் முழுமையின் நலமுமாகும்.

சர்க்கார் மக்களுக்கு சேவை செய்வதில் சிறந்த கூட்டாளியாக இருக்கவேண்டும். மூலப்பொருள்களை உதவலாம். சந்தைகளை கட்டுப்படுத்தலாம். பரிசோதனைகள்செய்தும் ஆராய்ச்சிகள் நடத்தியும், தேவையான ஆயுதங்களை அபிவிருத்திசெய்து உதவலாம் நல்ல முறையான வரிவிதிப்புகள் செலவுகள் மூலம் விநியோகத்தை சரிசெய்யலாம்.

இயற்கை சாதனங்களை செலவழிப்பதானது நாட்டு மக்கள் நிரந்தரமாக வேலைபெறக்கூடிய வழியாக இருக்க வேண்டும். அதே சமயத்தில் அச்சாதனங்களின் விரயத்தைத் தடுத்து பின் சந்ததியார்களுக்காக அவைகளை பாதுகாத்துக்கொண்டும் வரவேண்டும்.

எல்லாயந்திரசாதன உற்பத்தி முறைகளையும் லாபத்தைக்கருதாமல் வேலைகொடுக்கும் சாதனமாகச் செய்யப்பட வேண்டும்.

மக்களைப் பிறர் உழைப்பை நாடாது சுயதேவையைப் பூர்த்திசெய்து கொள்ளக்கூடிய வேலையில் அமர்த்த வேண்டும். அவர்களின் உற்பத்தி சக்திக்கு ஏற்க அவர்களின் வாழ்க்கை நிலை இருக்கவேண்டும். இடம்ப வாழ்வு கூடாது சமூகஅமைப்பு முழுதும் இவ்விதம் அமைக்கப்பட்டால் நிலைமையைச் சமாளிக்க யுத்தங்கள் வராது. போட்டியின்றியே கூட்டுறவுமூலம் எல்லாத்தொழில்களும் சமநிலையாக இருக்கும்.

பொருளாதார நூலில் பலவிதப்பொருளாக்க, வகைகளை இனப்பிரிவாகக் கூறும்பொழுது எவ்விதப் பிரயாசையும் எடுக்காமல் கிடைக்கக்கூடியதைப் பறித்துத்தின்னும் பறிமுதல் பொருளாக்கத்தை சூத்திர இனமென்று சொல்லலாம். ஆதி மனிதரும் நாடோடிக்கூட்டமும் இம்முறையைக் கைக்கொண்டவர்கள் முயற்சி பொருளாக்கமும் ஏகாதிபத்தி

யமும் வைசிய இனத்தில் சேரும். இவை இரண்டும் ஓரள வில் பறிமுதல் கொள்கையே. ஆனாலும் அவைகளின் முன் னேற்றத்தில்தீவிரமான ஆர்வமும்முழுசக்தியையும் கொண்டு முயற்சிப்பது என்ற குணமும் இருக்கின்றன. முதலாளித் துவமும் ஆங்கில ஏகாதிபத்தியமும் இவ்விதமான ஆரம்ப கால முன்னேற்றத்திற்கும் தனிப்பட்டவர்கள், தனிவர்க்கத் தினர்களுடைய பொருளாக்கத்தின் உதாரணமாகும்.

கூட்டுறவுமுறை பொருளாக்கத்தை க்ஷத்திரிய இனம் என்று கூறலாம். அது தனித்தன்மைகொண்டதல்ல ஆனல் ஒரு ஜாதி முறை அல்லது தேசீயத்தை தன் நோக்க மாகக்கொண்டது. நாம் தனிப்பட்டவர் சுகம் அல்லது லட்சி யத்திற்காக தியாகம் செய்யப்படும் நாஜி அல்லது கம் யூனிஸ்ட்டுமுறைகளே இதற்கு நல்ல உதாரணமாகக்கூறலாம்.

நிரந்தரப்பொருளாக்கம் நோக்கத்திலும் பொதுக் கருத்துக்களிலும் பிராமணீயம் போன்றது. அது உலக விதிகளுடன் ஒத்து கடவுள் தன்மையுடன் கலக்கமுயற்சிப் பது. அதுவே மனிதன் பெறக்கூடிய மிக உயர்ந்த முன் னேற்றம்.

இந்த முறையினல்தான் மிகக்கேவலமானவர் பாது காப்பும் மிகத்தாழ்ந்தவர் தமது முழு சக்தியையும் பெற்று மக்களின் முழு முன்னேற்றம் ஏற்படும். மனித இனம் முழு மையும் நாம் பெறவேண்டுமென்று நாம் தகுந்த முயற்சிகள் எடுக்காவிடில் நமக்குள் சில வர்க்கத்தினர் இடையில் கொடு மைகள் மிகுந்து, நாகரீகம் நசித்து, உலகம் அழிந்துவிடும் என்பதை நாம் உணரவேண்டும். நிரந்தரக் கொள்கைகளைக் கைக்கொண்டு திட்டம்போட மிக நுண்ணிய அறிவும் முன் னேற்றம் அடைந்த குணமும் வேண்டும். அம்முறையினல் விரைவில் பலன் ஏற்படாது. நாம் பொருமையுடன் இருக்க வேண்டும். கடவுள் கிருபை பலனளிக்க தாமதம் ஆகும். சத்தியம் அஹிம்சையின் வழி அதுவே அம்முறையின் லாப மும் குறைவுதான். ஆனல் அரசியலின் உண்மை ஜனநாய கமும் தேசங்களுக்கு இடையே சமாதானம் ஏற்பட அது ஒன்றே வழி.

## 12

# திட்டமான பொருளாக்கம்

ரஷ்யாவில் புரட்சி ஆரம்பமானதிலிருந்து பெரும்பாலும் பொருளாதார திட்டத்தைப்பற்றிய பேச்சே எல்லாவற்றையும்விட முதன்மையாக இருந்துவருகிறது. திட்டமான பொருளாதாரம் மேல்நாடுகளுக்கு நூதனமாக இருந்தபோதிலும் அது ஆதிகாலந்தொட்டு அமுலில இருந்து வந்திருக்கின்றது. இந்திய சமூக அமைப்பு முழுமையும் ஒரு பொருளாதாரதிட்டத்துடன் பன்னூற்றூண்டுகளாக வேலைசெய்து வருகின்றது. அநேக ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் மக்களின் தேவைகளை பூர்த்திசெய்ய அத்திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால்அது சிற்சிலஇடங்களில் இன்றையதேவைகளை பூர்த்திசெய்ய தகுதியற்றதாய் இருக்கலாம். மேல் நோக்குடன் கருதுபவர்களுக்குக்கூட இத்தனை நூற்றூண்டுகளாக நாம் ஆச்சரியம் கொள்ளும் முறையில் அத்திட்டம் நமக்கு நல்லுதவி செய்து வந்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். இதிலிருந்தே அது நிரந்தர பலம் பொருந்திய விதிகளினால் தயாரிக்கப்பட்டிருக்கிறதென்பதற்கும் அதன் கர்த்தாக்களின் தீர்க்கதரிசனத்திற்கும் அத்தாட்சியாகும். ரசியத்திட்டம் சுத்தமான பொருளாதாரத் திட்டமாக இருப்பினும்கூட நம் நாட்டுத்திட்டம் அரசியல், சமூகம், மதம், பொருளாதாரம் ஆகிய அனைத்தையும் கொண்டிருக்கிறது.

இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டில் போக்குவரவு சாதனங்கள் அற்ற அந்தக் காலத்தில் அமைக்கப்பட்ட அத்திட்டத்தை நோக்கின் இப்போதைய ரசியத்திட்டம் சிறுபிள்ளைகளின் விளையாட்டைப்போலவே நமக்குத் தெரிகிறது.

**நோக்கம்:—** திட்டம் வகுப்பது என்றால் நாம் ஒரு குறிப்பிட்ட நோக்கம்கொண்டு அதை அடைய தேச மக்கள் அனைவரும் முழுமுயற்சி செய்வதற்கு ஒருவழியாக அமைத்தல் வேண்டும். ஆதலால் நமது நோக்கத்தை நாம் நன்கு தெரிந்திருத்தல் வேண்டும். ரசியாவில் புதுத்திட்டமானது ஜாரின் கொடுங்கோலாட்சியினால் தேசத்தில் ஒரு வகுப்பினர்களுக்கு ஏற்பட்ட வறுமையை அகற்றி பொருள் பரவலாகவும் அதிகமாகவும் இருக்கவேண்டும் என்ற ஒரு நோக்கத்துடனேயே அமைக்கப்பட்டது. இதற்காக மற்ற இதர விஷயங்கள் எல்லாம் கவனிக்கப்படவில்லை.

நம் தேசத்தில் நமக்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று பண்டைய முறையின் அடிப்படையான அஹிம்சைத்தத்துவம். மற்றொன்று நாம் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்பட்டிருப்பது. இவ்விரண்டு காரணத்தாலேயே சுதந்திரத்திற்காக காந்திஜி அஹிம்சாமுறையில் போராடிக்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

ஒருவருக்கு சுதந்திரம் என்பது சுதந்திரமாய் அவரவர் விருப்பம்போல் நல்லதைச் செய்யவும், நினைக்கவும், தன் எண்ணங்களை வெளிப்படுத்தவும், அதன் விருப்பம்போல் தன் தேவைகளுக்காக உழைக்கவும் சுதந்திரம் வேண்டும். மனித சமூகத்தில் சுதந்திரம் என்பது ஒருவர் தன் விருப்பம் போல் எக்காரியத்தையும் செய்துகொள்ள கொடுக்கப்பட்ட உரிமை அல்ல. அது கடமைகள், உரிமைகள், எல்லைகள் முதலியவைகளைக் குறிக்கிறது. நமது உரிமைகள் பிறருக்குச் செய்யவேண்டிய கடமைகளினால் கட்டுப்படுத்தப்படுகிறது. இக்கட்டுப்பாடு அந்நியசக்திகளினால் நேரும்பொழுது நமக்குப் பலாத்காரத்தை அடிப்படையாகக்கொண்ட நில, நீர், ஆகாயப் படைகள் போலீஸ் போன்றவைகள் தேவை. ஆனால் அவ்விதக் கட்டுப்பாடு தமக்குள்ளேயே ஏற்படுமாகில் சமூகம் அப்பொழுது அஹிம்சையை ஆதாரமாகக்கொண்டதாகும். பிறருக்கு நாம் செய்யவேண்டிய கடமைகள் என்ற எண்ணம் நம்மைக் கட்டுப்படுத்தும்.

பலாத்காரத்தை அடிப்படையாகக்கொண்ட ஒரு சமூகத்தில் உண்மையாக முழு சுதந்திரம் இல்லை. அதில் அதிகாரவர்க்கத்தினரின் கட்டளைகளுக்குக் குடிகள் தலை குனியவில்லையெனில் பிறகு தடியடி தலைவிரித்தாடும். இவ்வகையில் ஏற்படும் பணிவு பயத்தினால் ஏற்படுவது. இது நாளடைவில் வெறுப்பிற்கும், சமுசயத்திற்கும் கொண்டுவிடும். ஜெர்மனி, இத்தாலிபோன்ற நவீன ஆட்சி அமைப்புகளைக்கொண்ட நாடுகளில் உள்ள பிரஜா உரிமை ஒருவித அடிமைத்தனமே. அது தனிப்பட்ட ஆண்டானுக்கு அடிமை அல்ல. ஆனால், அரசு என்று அம்பலத்தாடும் பலாத்கார முறைக்கு அடிமை. அங்கு குடிகளுக்காக அரசு அல்லாமல், அரசுக்காகக் குடிகள் அடிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர். உண்மை சுதந்திரம் பயம், வெறுப்பு, சமுசயம் முதலிய புகை சூழ்ந்த வானத்தில் வாழமுடியாது.

உண்மை சுதந்திரம் மக்கள் வளர்ச்சிக்குத் துணையாக இருத்தல் வேண்டும். அச்சுதந்திரத்தின் கீழ் மனிதன் மிருகத்தன்மை குன்றி மனிதத்தன்மை மிகுந்தும், தன்னலம் தகர்த்து சமூகப்பற்று அதிகரித்தும், பலாத்காரம் குன்றி கடமையில் கவனமும், மிருக உணர்ச்சி குறைந்து மனித உணர்ச்சி மிகுந்து மக்கள் நலத்தில் நாட்டம் அதிகம் உடையவனுவான். இதுதான் உண்மைச்சுதந்திரத்தின் சோதனை. எந்த அமைப்பு மக்களைப் பட்டாளம்போல் பணியும் கூட்டமாகச்செய்கிறதோ அது அவர்கள் வளர்ச்சியைத் தடுக்கிறதுடன் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகவும் இருக்கிறது. வெப்ப அறையில் ஒரு செடியை வைத்து வளர்க்கும்பொழுது அது அதிக அழகுடன் தோன்றினும் அச்செயற்கை சுற்றுப்புற பாதுகாப்பை நீக்கினுல் அதன் அழகு குறைந்து விடுவதைப்போன்றது செயற்கை அழகு இயற்கையான உண்மைப்பொருள் வேண்டின் நாம் அது தானுகவே வளர்ச்சியடைடையும் பருவம்வரை பொறுத்தல்வேண்டும். பலாத்காரமுறைகள் துரித பலனைக்கொடுக்கலாம். ஆனல் நீடித்து நிலையாதவை. அன்று உதித்து அன்றே அழிபவைகள் அஹிம்சா சமூதாயத்தை அமைக்க பாரதத்தில்அநேக நூற்றாண்டுகளாய் அமைக்கப்பட்டிருக்கும் அஸ்திவாரம் இருக்கிறது. நமது சமூதாயத்தை மறுபடியும் இந்த அடிப்படையில் நிர்மானித்தால் நமது நாகரீகம் உண்மையானதாய் இருக்கும் பாரதத்தின் பண்பையே படைத்திருந்த ஜப்பான் விவேகமற்ற பகட்டு பலாத்காரத்தை வளர்த்து வகைகெட்டிருப்பதை வருந்தத்தக்கதாகும். நாமும் அந்த வழிக்குச் செல்வோமா? அல்லது கவிஅரசு தாகூரின் சுதந்திரவழியில் இதங்கொள்வோமா?

## ஏ தந்தையே!

தலைநிமிர்ந்து நிற்க அச்சமற்ற இதயமும் சுயேச்சை அறிவும், குறுகிய தன்னலச்சுவர்களினுல் துண்டிக்கப்படாத உலகத்திலும், உண்மை உதிக்கும் இடத்திலும் குளசம்பத்துக்காக தளராது உழைக்கக்கூடிய இடத்திலும் நியாயவழியின்றி, அநியாயமார்க்கமென்ற மரணத்தைத்தரும் பாலைவனத்தைப்போலல்லாத இடத்திலும், பரந்த நோக்கமும், செய்கையும், அருளும். மணமும் உள்ள இடமுமான சுதந்திர விண்ணுலகில் என் தேசத்தை விழிக்கச்செய்?

மார்க்கம்.

மேற்கூறியலட்சியத்தை நாம் அடைவது எங்ஙனம்? முன் கூறப்பட்ட பாராவில் அஹிம்சாமுறையில் ஏற்படுத்தப் பட்ட சமுதாயத்தில் தனிப்பட்ட ஒவ்வொருவரும் சுதந்திரத் துடன் வாழ்வதே நமது நோக்கம் என்று தீர்மானித்தோம். மக்களிடத்திலே அஹிம்சையின் அடிப்படைக்குணம் இருக் கிறது. நாம் இன்னும் அவர்களை அவ்வழியில் விருத்திசெய்ய வேண்டும். பலாத்கார முறைகளை நாம் தடுக்கவேண்டும். நாம் நாகரீகத்தைக்கைக்கொள்ளுகிறோமென்பதின்பொருள் ஒருவரை விருத்திசெய்வதே. அவ்வித சமூகம் தன்னடக்கம் ஒழுங்குபோன்ற முறையால்தான் வாழக்கூடும். ஆகையால் நாம் இவைகளுக்கு ஏற்றதாகத் திட்டங்கள் வகுக்கவேண்டும் இவ்வித குணங்களை நாம் தீவிரமுயற்சியின்றி அடையமுடி யாது. அவைகளினால் மக்களுக்கு நல்ல பயிற்சி கொடுக்க வேண்டும்.

ரேடியோ, சினிமா போன்ற கருவிகள் விளம்பரத் திற்கும், பொழுதுபோக்கிற்கும் எத்துணைதான் தகுந்தசாதன மாக இருப்பினும் நமக்கு பண்பை உண்டாக்குவதில்லை நாக ரீகமடைய வேண்டுபவர் பண்பளிக்கும் கருவியுடன்கூடி ஒத் துழைக்கவேண்டும். ஒருவன் ரேடியோ சங்கீதத்தைமட்டும் கேட்டுக்கொண்டு இருப்பதினாலேயே சங்கீத வித்வானாக ஆக முடியாது. அநேக ஆண்டுகள் தன்னுடைய வாத்தியத்தில் நன்கு பயிற்சியடைந்தபின்பே நல்ல பாடகனாக வெளிவர முடியும். குறைந்த அனுபவமும் அல்ப அறிவும் நாகரீகத் தை உண்டாக்காது அந்த அனுபவம் நம் ரத்தத்தில் ஊறி நம்முடன் கலக்கவேண்டும். அதற்கு காலதாமதமாகும் சிரமமாகவும் இருக்கும். ஆனால் அது எப்போதும் நிலைத்தி ருப்பதுடன் முயற்சிக்கு ஏற்ப முழுப்பலனையும் கொடுக்கும். நமது நாட்டில் சாத்துவீக முறையில் பண்பும், நாகரீகமும் ஏற்படவேண்டுமாகில் நாம் போதுமான முயற்சியெடுத்துக் கொள்ளவேண்டும்.

கொள்ளை முறையினால் ஏற்பட்ட ஏகாதிபத்தியத்தில் அதேமுறையில் பயிற்சியடைந்த மனிதர்களுக்கு சமூகத்தில் உன்னத ஸ்தானத்தைக் கொடுக்கவேண்டியது முக்கியமாக இருக்கிறது. சாத்துவீக மார்க்கத்தைக் கைக்கொள்ளும் சமூகத்தில் நாம் எல்லாவற்றையும் மறந்து துறந்து மற்றவர் களுக்கு சேவைசெய்வதற்கு என்றே வாழக்கூடிய லக்ஷிய

வாதிகளின் (தியாகிகளின்) வாழ்க்கையை எடுத்துக்காட்ட வேண்டும். என்றும் அழியாவலைகயில் ஒரு நாகரீக நிலைமையை நாம் உண்டாக்கவேண்டும். கர்வமும், ஆடம்பரமும் உள்ள மிருக உணர்ச்சி மிகுந்த உலகத்தில் நாம் எதிர்த்துப் போராட துவங்கும் சமயத்தில் பொருள் ஒரு சிறிதுதான் உதவக்கூடும். முடிவுக்காகத் தப்பு அபிப்பிராயத்தைக் கொண்ட ஒரு மாபெரும் எதிர்ப்பு சக்தியின் எதிர்ப்பிலிருந்து நாம் காப்பாற்றிக்கொள்ளவேண்டும்.

நாம் அரசியல் சுதந்திரம் அடைந்து அதை பொது மக்களின் நன்மைக்கு அதை உபயோகப்படுத்த சக்தி அற்றவர்களாக இருப்பின் நமக்குஅவ்வித சுதந்தரத்திலுல் என்ன பலன். அவ்வித சுதந்திரத்தைக் காப்பாற்ற நாம் ஒரு பலமான ஆயுதம் தாங்கிய பெரும்படையை வைத்திருக்கவேண்டுமானுல் அப்பெரும் படையில் உள்ளவர்களின் சுதந்திரத்தைப்பறிப்பதோடு அல்லாமல் நமது நோக்கத்தை தோல்வியுறச்செய்கிறோம். ஆகையால் சுதந்திரமாய் வாழ ஒரு வழியை வெகு கவனத்துடன் வகுக்கவேண்டும். காந்திஜி கடந்த காலத்திலிருந்து கண்டுகொண்டிருக்கும் உண்மை என்னவெனில், சுதந்திரத்திற்குப் பயிற்சிச்சாலை அரசியல், பொருளாதாரம், சமூக சீர்திருத்தம், கல்வி முதலிய துறைகளில் ஆக்கவேலையே.

## அரசியல்.

காந்திஜி பொதுவாழ்வில் இறங்கினது இரு பெரும் சக்திகளை எதிர்க்கவேதான். ஆகையால் நாம் முதன்முதலில் அரசியல் துறையை எடுத்துக்கொள்வோம். அநேகமாக அரசியல் வாதிகள் அனைவருக்கும் அரசியல் துறையில் உயர்ந்த அந்தஸ்த்துப்பெறவும், அதன்வாயிலாக அதிகாரத்தையும், சலுகைகளையும்பெற்று ஆனந்தமடைவதிலேயே அரசியல் முடிந்துவிடுகின்றது. காந்திஜியின் அரசியல் அதிகாரமானது பொதுமக்களுக்கு நன்ருக உழைக்க வழி இருக்கின்றது. காந்திஜிக்கும் இதர அரசியல் தலைவர்களுக்கும் உள்ள வித்தியாசங்கள்ல் இந்தவழிதான் பூழுதும் ஆதரிக்கப்படவில்லை. அரசியல் அரங்கில் காந்திஜி அடிவைப்பதற்குமுன்பு பிரிட்டிஸாரை நீக்க விருப்பியவர்களுக்கும் நகரமக்களுக்கும பாதுகாப்பிடமாக அரசியல் இருந்தது. அந்த அதிகார பீடத்திற்கு அடிப்படையாகத் தங்களையே வைத்துக்கொண்டார்கள். அவர்களுடைய அரசியல் சுயநலமே

மிகுந்து இருந்ததுடன் மேடைத்தர்க்கத்திலேயே ஆரம்ப மாகி முடிந்துவிட்டது. காந்திஜி இந்த அலங்கார கண்ணிய வான்களின் முறைக்கு எதிரான வழியில் அரசியலின் ஆணி வேர்களை கிராமங்களுக்குள் புகுத்தினர் இது பொதுமக் களை விழிப்படையச்செய்தது. அவர்கள் அச்சத்தை அகற் றியது தன்னம்பிக்கையும், தன்மானமும் கொள்ளச்செய் தது. இவ்வழி தன்னலம் தகர்த்து தாய்நாட்டுக்கு சேவைபு ரியும் இளம்வீரர் படைஒன்றை வீறுகொண்டெழச்செய்தது. பாலவையர்கள்கூட தங்கள் பண்டைய பழக்கங்களை பறக்க விட்டுவிட்டு, பொதுநலத்தொண்டில் அதிகவேலை செய்தனர் சிறைபுகுந்தனர். துன்பமே இன்பமென அன்புடன் அரும் பணி ஆற்றினர்.

**உண்மைக்குடிஅரசு:—**

மேல்நாடுகளில் நாம்காணும் குடியரசு பிரதிநிதித்து வமுள்ள தனி ஆட்சி தன்னாட்சியும் இதுவே தனியாட்சியும் இதுவே எதேச்சாதிகார ஆட்சிமுறையில் சிறிது மாற்றம் உடையது அவைகள் எல்லாம் அனைத்தும் விசித்திரமான வெவ்வேறு பெயர்களினல்மாறவேடப்கொண்டமுழுசர்வாதி காரித்துவங்களே குடியரசின் தத்துவம் யாதெனில் நிர்வா கப்பொறுப்பும், சட்டம் இயற்றும் பொறுப்பும் மக்களிடம் இருக்கவேண்டும் தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனுக்கும் இது இருக்கவேண்டும் விளங்கக்கூறின் ஒவ்வொரு பிர ஜைக்கும் தனக்காகத் தானே சட்டமியற்றும் உரிமைஇருக் கும் இது அவனை நன்மையை மட்டுமன்றி தீமையும் செய்யும் சகதியையும் கொடுக்கிறது அவ்விதம் நாட்டிற் காக எல்லோருடைய பொதுநன்மைக்காகவும் உழைப்ப தற்கு அரசியலை அமைக்க ஒவ்வொரு பிரஜைக்கும் முக்கிய மாக உயர்தரமான நீதிமுறையில் முன்னேற்றமும் தேவை யாக இருக்கிறது ஒவ்வொருவரும தங்கள் உரிமையைக் காட்டிலும் தங்கள் கடமையில் அதிக கவனத்துடன் நடந்து கொள்ளவேண்டும். தற்காலத்தில் குடியரசுகள் என்று சொல்லப்படுபவை உரிமைகளை அடிப்படையாகக்கொண்டி ருக்கின்றன உரிமைகளைச் சொல்லும்பொழுது முடிவில் விரோதத்தில் கொண்டுவிடுகிறது. உரிமைகளை வற்புறுத் தல் உலகாயுதத்தின் ஆரம்பநிலைமையாகும். அதிக புத்தி நுட்பமுள்ள மனிதன் கடமைகளில் அதிக கவனம் செலுத்து வான். கடமைகளைச் செய்வதற்கு அதிக தன் ஒழுங்கும்,

தன்னடக்கமும் அதிகம் வேண்டும். ஒவ்வொரு பிரஜையும் நற்காரியங்களையே செய்ய பயிற்சியடைந்த பின் அவன் நிர்வாகப்பொறுப்பையும், சட்டமியற்றும் அதிகாரத்தையும் தீய வழியில் செலுத்தமாட்டான் என்று நினைக்கலாம். அவ்வித ஆட்சியில் காலாட்படை, கப்பல்படை, ஆகாயப்படை முதலியவைகளுக்கு இடம் இல்லை. ஒவ்வொரு பிரஜையும் போலீஸைப்போன்று வேலை செய்வான். அவன் மனசாட்சியே போலீஸ்காரனாகவும், சட்டமாகவும் இருக்கும் அரசியல் துறையில் மனிதன் பெருமையடைவதற்கு நாம் முயற்சித்தால் நிர்வாகப் பிரதிநிதிகள், சட்டசபைப் பிரதிநிதிகள் முதலியவர்களின் அதிகாரத்தைக் குறைத்து தனிப்பட்டவர்களை அதிகாரத்திற்கு தகுதியுள்ளவர்களாக்குவதையே நமது நோக்கமாகக் கொள்ளவேண்டும்.

**சத்தியாக்கிரகம்:—**

மாசுநிறைந்த அரசியல் சத்தியாக்கிரகத்தினால் புத்துயிர் பெறுகிறது. இவ்வாயுதத்தை உபயோகப்படுத்துவதால் ஒருவன் தன் எதிரியை வசப்படுத்தலினால் வெற்றி கொள்கிறான். தான் துன்பத்தை ஏற்றுக்கொள்வதால் எதிரி தோற்கடிக்கப்படுகிறான் இந்தமுறையில் மனிதனின் விலங்குச்செய்கைக்கு இடம் இல்லை. அரசியல் வாழ்வில் கோபம், வெறுப்பு, பொருமை, கொலை இவைகள் எல்லாம் தினசரி வழக்கமாக இருக்கிறது ஆனால் இப்பொழுது மனிதனுடைய உயர்ந்த தன்மைகளைக்கொண்டு வித்தியாசங்களை சமாதானமாகத்தீர்க்க முயற்சிகள் செய்யப்பட்டுவருகிறது

**அரசாங்கம்:—**

அரசியலின் நோக்கம் பொதுமக்களுக்குச் சேவை செய்வதே என்பதை முன்பே குறிப்பிட்டிருக்கின்றோம் அரசியல் என்றால் நாம் ஆட்சியைப் பெற்றுக்கொண்டு மக்களின் தேவைகளை கவனிக்க சர்க்காரை உபயோகிக்கலாம். நாட்டைப் பொருத்தவரையில் பெரு நோக்கம்கொண்ட அநேக விஷயங்கள் அடங்கியிருக்கும் இயற்கையாகவே அவைகள் தனிப்பட்டவர்களுடைய குறுகிய நோக்கங்கொண்ட முடிவுகளை எதிர்ப்பவைகளாக இருக்கலாம். ஆகையால் அக்காரியங்களை சமுதாயத்தின் பொதுத்தேவைகளாக எடுத்துக் கொள்ளலாம். சிற்சில விஷயங்களில் தனிப்பட்டவர் விருப்பங்களுக்கு நேர் எதிரிடையாக இருந்தபோதிலும் சமூகம்

முழுமைக்கும் சேவைசெய்யும் நோக்கம் உள்ள ஒரு கூட்டத்திற்கு அவ்விஷயங்களை விடுவது நன்மையாகும்.

இக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய பதவியை சுயநலத்திற்காக உபயோகித்துக்கொள்ளமாட்டார்கள் அவர்களுடையசம்பளம் அதிசக்திறமையுள்ள வியாபாரிகள் சம்பாதிக்கும் லாபத்தைக்கொண்டு திட்டமசெய்யாமல் சாதாரண கிராமவாசியின் வருமானத்தைக்கொண்டு திட்டம் செய்யப்பட்டதாக இருக்கும். மத்திய மாகாணம், பீரார் மாகாண சர்க்கார்களின் தொழில் பரிசீலனை அறிக்கையின்படி சாதாரண கிராமவாசியின் வருமானம் ஒரு ரூபாய் ஆகிறது அவ்வித மக்களிடமிருந்து வாங்கும் வரிப்ணத்திலிருந்து அவர்களுக்கு ஊழியஞ்செய்யும் அதிகாரிகளுக்கு ஆயிரக்கணக்கில் சம்பளம் கொடுப்பது அநீதி மிக உயர்ந்த கிராமத்தொழில்களின் மூலமாய்க்கூட மாதம்ரூபாய் எழுபத்தைந்து ஒரு குடும்பம் சம்பாதிக்க முடியாது ஆகையால் ஒரு டிவிஷன் கமிஷனருக்கு ரூபாய் இருநூறு சம்பளம் கொடுப்பதுகூட அதிகப்பட்ட தொகையே இந்த விகிதத்திலிருந்தே மற்ற சம்பள விகிதங்களும் எவ்வாறு குறைக்கப்பட்டிருக்கிறது வக்கீல்கள், டாக்டர்கள் முதலியவர்களுடைய சம்பளமும், இஞ்சினீர், ஆசிரியர் இதர பொதுநல ஊழியர்கள் சம்பளங்களும் வரிசைக்கிரமமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் சர்க்கார் ஊழியர்களின் சம்பளங்கள் தேசத்தின் சக்திக்கு மீறியதாக இருக்கின்றது படித்தோர்கள் எல்லோரையும் குமாஸ்தா உத்தியோகத்திற்குத்தள்ளிக்கொண்டு போவதற்கு ஒழுங்கற்ற இந்த சம்பளமுறை தான் காரணம். படித்தோர்களை கிராமங்களின்மேல் பற்று உண்டாகும்படி செய்துவிட்டால் இந்த அபாயகரமான குமாஸ்தா வேலை மோகத்தை பெட்டிக்குள் பூட்டிவிடலாம் சர்க்கார் தான் வேலை கொடுக்கும் பெரிய எஜமானனுகவும், பெரிய செலவாளியுமாகும். சரியாக வகுக்கப்பட்ட சம்பளவிகிதங்களினுல் பலவித உத்யோகங்களை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய பொறுப்பு சர்க்காருடையது. நமது தேசீய சர்க்கார் இதை எடுத்துக்கொள்ளும் காங்கிரஸ் சர்க்கார் மிக உயர்ந்த சம்பளம் ரூபாய் 500 என்று ஏற்படுத்தியிருப்பது ஒருநல்ல ஆரம்பமே. இம்முறையில் முழுதும் கைகொள்ளப்படவில்லை. 'அது பின்னல் விளையும் பயன்.

**கடமைகள்:—**

சர்க்கார் அரசாங்கத்தை நன்கு நிர்வாகம் செய்வதுடன் மக்களின் வேலைகளிலும் முக்கியமான கூட்டாளியாக இருக்கவேண்டும், காடுகள், கனிப்பொருள்கள், சக்திஉற்பத்தி நிலையங்கள், போக்குவரவு முதலியவைகளைப்பற்றிய பொறுப்பு சர்க்காரைச் சேர்ந்து இருப்பதால் மக்களுடைய பொருளாதார முயற்சிகளுக்கு நன்மையோ, தீமையோ சர்க்கார் செய்யலாம்.

**காடுகள்:—**

மக்கள் தங்கள் தொழில்களுக்காக தேவையான மூலப்பொருள்களை உடைய வற்ற்தநீர்நிலையங்களைப்போன்றவைகள் காடுகள். நம் நாடு காட்டுச்செல்வம் அதிகம் உடையது. ஆனால்அது மக்களின் அவ்வப்போதிய தேவைகளுக்கு ஏற்றவாறு மூலப்பொருள்களை உதவ திட்டமிடப்படவில்லை. ஒரு தச்சனுக்கு மரம் தேவையாக இருக்கும்பொழுது அவன் அதைச் சந்தையில் வாங்கக்கூடும். அம்மரப் பக்குவமாயில்லாவிட்டால் தச்சன் செய்யும் பொருள்கள் பிளவுபட்டும், வளைந்தும் போய்விடுகிறது மரங்கள் வேலைக்குப் பக்குவமான பதமடைய காலம் செல்லும். ஒவ்வொரு தச்சனுக்கும் மரங்களைச் சேகரித்துவைக்க பரந்த இடமும், அம்மரங்கள் பதம் அடையும்வரையில் காத்திருக்கவும் சக்தியில்லை ஆகையால் சந்தையில் மரங்களை விற்பதற்கு முன்னால் அம்மரங்களைக் காட்டிலேயே பதப்படுத்தும்வரையில் வைத்திருக்க வேண்டியது காட்டிலாக்காவின் பொறுப்பாகும். அதுபோலவே மக்களின் தேவைக்கும் அவர்களுடைய தொழில்களுக்கும் தேவையான பலவகையான காட்டுச்சாமான்களைக் கட்டுப்பாடுசெய்து தேவைக்குத்தக்கவாறு அவைகளைக்கொண்டு ஒழுங்குசெய்யவேண்டும். இக்காலத்தில் காட்டிலாக்கா நிர்வாகத்தினுடைய இந்த நோக்கம்ஏறக்குறைய கவனிக்கப்படுகிறதில்லை. ஆனால் காடுகளிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானத்தை மாத்திரமே முக்கியமாகக் கருதுகிறது.

**தாதுப்பொருள்கள்:** -

மக்களுக்குப் புதையலைப்போன்றது உலோகச் சுரங்கங்களும், கற்குழிகளும் காடுகளைப்போலன்றி தோண்டி எடுத்தபின் தீர்ந்துவிடக்கூடியவை. ஆகையால் அவைகளை நன்ருக உபயோகப்படுத்திகொள்ள நல்ல கவனம் செலுத்தவேண்டும் அவைகளால் மக்களுக்குத் தொழில் ஏற்படும் மூலப்பொருள்களை நாட்டைவிட்டு வெளியே அனுப்புவது தேசத்து மக்களுடைய பிதுரார்ஜித சொத்தை விற்பதைப் போலாகிறது. தாதுப்பொருள்களைக்கொண்டு பொருள்களைச் செய்யவேண்டியது அவைகளுக்குக் கிடைக்கக்கூடிய நாட்டினரது பிறப்புரிமையாகும். இன்று இந்தியாவில் வெட்டியெடுக்கப்படும் தாதுப்பொருள்களில் பெரும் பங்கு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆகையினல் நாம் மக்களுக்கு வேலைகொடுக்கும் சந்தர்ப்பத்தை இழப்பதோடு அல்லாமல் நாட்டின் செல்வத்தையும் இழந்து, நாட்டையும் ஏழ்மைப்படுத்துகிருேம். மற்ற இயற்கைப் பொருள்களைப் போல் தாதுப்பொருள்களை நன்ருகப்பக்குவம்செய்து அவைகளை வேலைசெய்தபின்பே, உபயோகிக்கும் பொருளாக அவைகளைச் செய்யமுடியும். அவ்வாறு உபயோகிக்கக்கூடிய பொருள்களாகச்செய்த பிறகுதான் அவைகளை வியாபாரம் செய்யக்கூடும். நாட்டிலுள்ள தாதுப்பொருள்களை அந்நிய நாட்டிற்கு விற்கக்கூடிய எந்த சர்க்காரும் தன்ஞட்டிற்கு அபகாரம் செய்வதாகும் ஒரு சுதந்திர சர்க்கார் இருந்தால் மூலப்பொருள்கள் சுரண்டப்படாமல் பாதுகாப்பு அளிப்பதுடன், அவைகளைத்தன் நாட்டுமக்கள் தங்கள் தொழில்களில் நன்ருக உபயோகப்படுத்திக்கொள்ளும்விதம் உதவிபுரிவார்கள். இதுதான் சர்க்கார் ஆதிக்கத்தின்கீழ் பெரிய கைத்தொழில்கள் உற்பத்தியாவதற்குத் தகுந்த இடம். சர்க்காரின் ஆதிக்கத்தில் உள்ள பெரிய எஃகு இயந்திரத் தொழிற்சாலையில் எஃகுச் சட்டங்களையும் கம்பிகளையும் தகடுகளையும் செய்யலாம். ஆனல் ஆணிகளையும், திருகாணிகளையும் செய்யலாகாது. பின்கூறப்பட்ட திருகாணிவேலை கிராமக்கொல், கொல்லனுக்கு ஒதுக்கிவைக்கப்படும் இதைப் பின் கவனிப்போம்.

**சக்தி:—**

நாட்டிலுள்ள நீர்சக்தியைக் கட்டுப்படுத்தி மின்சார சக்தியை உற்பத்திசெய்து அதைக் குறைந்த விலையில் மக்களுக்குக் கொடுக்கலாம். இதைத் தனிப்பட்டவர்கள் நடத்தாமல் சர்க்காரே கைக்கொண்டு நடத்தவேண்டும்.

**போக்கு வரவு சாதனங்கள்:—**

ரோடுகள், கால்வாய்கள், ரயில்வேக்கள், கப்பல் போக்குவரவுகள், முதலியவைகளை சர்க்காரே ஏற்றுநடத்த வேண்டும் போக்குவரவுக் கால்வாய்கள் மிகக்குறைவாய் இருப்பதினல் தூர இடங்களுக்கு ரயில்வே மார்க்கமாகவே ஏற்றுமதி நடைபெற்றுவருகிறது. சாமான்கள் இங்கும் அங்கும் போவதற்கு மிக கவனத்துடன் விதவிதமாக ரயில்சத்தம் விதிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றது இவ்வாறு கட்டுப்படுத்துவதில் மக்களின் நலன் ஒன்றைமாத்திரம் உத்தேசித்துச்செய்யவேண்டும். இன்று ரயில்வேக்கள் நாட்டிலுள்ள மூலப்பொருள்களை வெளிநாடுகளுக்கு அனுப்பவும், வெளிநாட்டு ஆலை உற்பத்தி சாமான்களை நாட்டின் மூலைமுடுக்குகளிலுள்ள கிராமங்களுக்கும்கூட கொண்டுபோய் சேர்க்கவுமே சாதனமாக இருக்கிறது இம்முறை நாட்டின் கைத்தொழிலுக்கு மிகப்பெரிய தீமையை விளைவித்து இருக்கிறது. இந்தியாவில் பெரிய கைத்தொழிலான எண்ணை ஆட்டுதலைப்பற்றிய சம்பவம் ஒன்றை இங்கே கூறுவோம்.

நூறு மணு இலுப்பக்கொட்டைகளை மத்தியமாகாணத்திலிருந்து பம்பாய்க்கு அனுப்ப ரயில்கூலி ரூ 46—6—0 ஆகிறது அதே நூறு மணு கொட்டையை மத்தியமாகாணத்தில் அகோலா என்ற இடத்தில் ஆட்டி அந்த எண்ணையையும் பிண்ணாக்கையும் பம்பாய்க்கு அனுப்புவதென்றல் ரூபாய் 77—15—0 ஆகிறது. இதனல் மத்தியமாகாணத்து ஆலை 100 மணுவிற்கு ரூ 31—7—0 ரயில் சத்தத்திலேயே நஷ்டம் அடைகிறது. ஆகையினல் இவ்வாறு நஷ்டம் அடையாமல் குடியானவர்கள் கொட்டையாகவே பம்பாய்க்கு அனுப்ப ஆரம்பிப்பார்கள். பதினயிரத்திற்கு மேற்பட்ட இவ்விதத் தனிப்பட்ட விசேட விகிதங்கள் இருக்கின்றன தேசீய சர்க்காராய் இருந்தால் இவ்வித அநீதிகளை முதலில் நீக்க முற்படுவார்கள். விவசாயிகளின் பொருளாதாரத்திற்கு லாபகரமான திட்டங்களைக்கொண்டு கட்டுப்படுத்துவார்கள். செள்கரியமான சாதனம் ரயில்பாதை அவைகளின்மூலம் மக்கள் தொழிலைத்துலைத்து ஏழ்மையாக்குவதும் எளிதே.

**வரி:—**

சர்க்கார் தன் வேலையைச் செய்வதற்குப் பொருள் தேடவேண்டியிருக்கிறது. இது வரிவிதிப்பின் மூலமாக அதற்குக் கிடைக்கிறது வரிகொடுக்க சக்தியற்றவர்களிடம் இருந்து இந்தவரி வசூலிக்கப்படாமல் நாம்கவனமாகப் பார்த்துக்கொள்ளவேண்டும் வசூலிக்கும் வரியை செலவழிக்கையில் சர்க்கார் சிலவுகள் மக்களின் வரிகொடுக்கும் சக்தியை அதிகப்படுத்துவதாக இருக்கவேண்டும் கிராமங்களிலிருந்து வரிவசூலித்து அதை நகரஙக்களின் நலனுக்காக செலவழிக்கும்பொழுது அங்குள்ள மக்கள் ஏழ்மையை அடைகின்றனர் நாம் முன்னதாகவே சம்பளங்களிலிருந்து ஒரு தப்பும் வழியைப்பார்த்தோம். மற்றொன்று வரியைத் தானியமாக வசூலித்தல் தானியமாக வரி வசூலிப்பது ஒருவிதத்தில் அசௌகரியமாக இருந்தபோதிலும், அவ்விதமாற்றம் தேசியவருமானத்தின் மொத்த நஷ்டத்தைத்தடுக்கும் சர்க்கார் ஊழியர்களுக்கு சம்பளம் பாதி பண்டமாகக் கொடுக்கலாம். இப்பண்டையமுறை பல முக்கிய நாடுகளில் இன்னும் நடந்துவருகின்றது. பட்டாணியர் நாடாகிய எல்லைப்புற மாகாணத்தில் இன்னும் இம்முறை நன்கு நடைபெற்றுவருகிறது.

**சிலவுகள்:—**

ஒருபக்கத்திலிருந்து வசூலிக்கப்படும் வரியின்பெரும் பாகம் வேறொரு இடத்தில் செலவழித்தால் வரி வசூலிக்கப்பட்ட இடம் வறுமைநிலையை அடைகிறது. குடியானவர்களிடமிருந்து வரிவசூலிக்கப்பட்டு டில்லிமாநகரத்தில் கட்டிடங்களுக்கு செலவழிக்கப்படுவதனால் தேசம் வறுமையால் வாடுகிறது வரிப்பணம் கூடுமானவரையில் வசூலிக்கப்பட்ட இடத்திற்கு அருகிலேயே சிலவழிக்கப்படவேண்டும். அந்நியநாட்டுச் சாமான்கள் விலைசரசம் என்று தனிப்பட்டவர்கள் வாங்கலாம். ஆனால் சர்க்கார் அவ்விதம் செய்யக்கூடாது. சுதேசிக் காகிதங்கள் கிடைக்கும்பொழுது, ஸ்வீடன் தேசத்துக் காகிதங்களை சர்க்கார் வரிப்பணத்தைக்கொண்டு வாங்கினால் அது வரிசெலுத்துவோருக்கு தீங்குசெய்வதாகும். சர்க்கார் அந்நியநாட்டுக் காகிதம் 1 அணாவாக இருக்கும்பொழுது சுதேசிக்காகிதத்திற்கு $1\frac{1}{2}$ அணா கொடுத்தாலும் தேசமக்களின் நலனை நோக்கும்பொழுது அந்த அதிகவிலை கொடுப்பதானது பொருளாதார முறையில் சிக்கனமானதாகும்.

முதல் முறையில் கொடுக்கப்படும் 1 அணு தேசத்தைவிட்டு வெளியேபோகிறது. இரண்டாவது சுதேசியை வாங்குவது வரிசெலுத்துவோருக்கு வேலையைத் தருவதுடன் செல்வம் உள்நாட்டிலேயே புழங்குகிறது. ஆகவே சர்க்காரின் எல்லாச்சிலவுகளும் கூடுமானவரையில் வரிவசூலிக்கப்படும் எல்லைக்குள்ளேயே திரும்பச் சேருமாறு செலவு செய்யப்பட வேண்டும்.

**பெரிய கைத்தொழில்கள்:—**

பெரியகைத்தொழில்கள் தனிப்பட்டவர்கள் அநேகருடைய வாழ்க்கையை கட்டுப்பாடுசெய்கிறது. ஒரு உண்மை ஜனநாயகத்தில் தனிப்பட்ட எந்த பிரஜைக்கும் இந்த அதிகாரம் இருக்காது. ஆகையால் எல்லா பெரிய கைத்தொழில்களும் சர்க்காருக்கே சொந்தமாகவும், சர்க்காராலேயே நிர்வாகம் செய்யப்படவேண்டும். அவ்வித கைத்தொழில்கள் அநேகம் சர்க்காருடைய பலவகையான உதவியின்றி நடத்த முடியாது. போக்குவரவு வாடகை விகிதத்தில் வித்தியாசங்கள் இருப்பதை நாம் முன்னதாகவே குறிப்பிட்டிருக்கின்றோம். பெரும் உற்பத்திகளுக்கு பல்வேறு வசதிகளான கப்பல்துறைகள், ஏற்றுமதி, இறக்குமதிசெய்யும் இடங்கள், கப்பல் செப்பனிடும் துறைகள், ரயில்ப்பாதைகள் முதலியவைகள் தேவை. பொதுமக்களின் வரிப்பணத்தைக்கொண்டு இவ்வித வசதிகளைச் செய்துகொடுத்து அத்தொழில்களின் மூலம்வரும் லாபத்தை தனிப்பட்ட ஒருவன் அனுபவிக்கவிடுவது பொருத்தமற்றதாகும். இவ்விதம் நடக்கக்கூடாது. வரிப்பணம் பொதுநன்மைக்காகவே சிலவுசெய்யப்படவேண்டும். இக்காரணத்திற்காகவேனும் பெரியகைத்தொழில்களை சர்க்காரே நிர்வகிக்கவேண்டும்.

மக்களின் சிறிய கைத்தொழில்களுக்கு தேவையான மூலப்பொருள்கள் கிடைக்குமாறுசெய்ய பெரிய கைத்தொழில்கள் அதிக அவசியமாய் இருக்கின்றன. அவ்வித மூலப்பொருள்களை தனிப்பட்டவர்களின் உரிமையாக விடக்கூடாது. ஆகையால் அவ்வித எல்லாக் கைத்தொழில்களும் சர்க்கார் ஆதீனத்தின்கீழ் இருக்கவேண்டும். பொருளாதாரத்தில் பெரிய கைத்தொழில்கள் என்பது அரசியலின் ஜனநாயகத்திற்கு எதிரிடையானது. (விரோதமானது) மேல்நாடுகளில் பெரிய தொழில்கள் எல்லாம் தற்செயலாக ஏற்பட்டதல்ல. அந்நாட்டினர்கள் ஆதிக்க வேட்கை மிகுந்து,

ஏதேச்சாதிகார முறையை நினைத்துக்கொண்டிருந்ததின் முடிவே அது அரசியல் துறையில் சர்வாதிகாரத்துவத்தையும், பொருளாதாரத்துறையில் இயந்திரத் தொழில்களையும் அவர்களாகவே ஏற்படுத்திக்கொண்டார்கள். இவைகளிரண்டும் ஒன்றையொன்று சார்ந்துதான்போகும் நாம் ஒன்றை விட்டு மற்றதை அடைய முடியாது

நாம் உண்மையான ஜனநாயகத்தை விரும்பினல் இயந்திரத் தொழில்களின் மூலம் நமக்கு தேவையாகும் பொருள்களை உற்பத்தி செய்வதைக் கைவிட்டுவிட வேண்டும். இதனுல் ஒரு இயந்திரத் தொழில்கூட தேவையில்லை என்பதில்லை அவைகளைக் கட்டுப்படுத்தினபோதிலும் அவைகளுக்கும் ஒரு குறிப்பிட்ட இடம் இருக்கும். சர்க்காருக்குச்சொந்தமாயும், சர்க்காரின் ஆதிக்கத்திலுமுள்ள தொழில்கள் பொதுமக்களுக்குத் தேவையான மூலப்பொருள்களை கொடுக்கவும், கைத்தொழில்களுக்குத் தேவையான ஆயுதங்களையும் தந்தி, தபால், மின்சாரம் முதலியவைகளை நடத்தவும் வேண்டும். இவ்வித தொழிற்சாலைகளுக்கு அதிகவேலை இருக்கிறது சில இரசாயனப் பொருட்களை மிகக் குறைவாக உபயோகிக்கும்பொழுது மருந்தாகவும், அதிக அளவில் உபயோகித்தால் விஷத்தைப்போலவும் இருப்பதுபோல் ஒருநிலைப்பட்ட இயந்திர உற்பத்தியும் மக்களின் பொருளாதார முயற்சிகளுக்கு ஒத்து இருந்தால், நன்மை பயக்கக்கூடியதாகவும், மக்களைச் சுரண்ட உபயோகிக்கும்பொழுது மிகத்தீங்கு செய்வதாகவே ஆகும். இவ்விதத் தொழில்கள் பொதுமக்களுக்காக நஷ்டம் ஏற்படினும்கூட நடத்தமுடியும் ஆகையால் அவ்விதத் தொழில்கள் சர்க்காரால் நடத்தப்படுவதே மிகச் சிறந்த முறையாகும்.

## பொருளாதாரமுயற்சி

தங்கள் சுயதேவைகளைத் தாங்களே பூர்த்திசெய்து கொள்ள மக்களுக்குச் சுதந்திரம் இருக்கவேண்டும் இதை வெகு சுலபமாக செய்துவிட முடியும். லாபத்தைக் கட்டுப்படுத்தினுல் தொழில்களில் ஒழுங்கு ஏற்படும். இன்று உலகத்தின்முன் இருக்கும் கஷ்டம் உற்பத்தியின் குறைவினுல் ஏற்படுகிறது அல்ல. ஒழுங்காகப் பங்கிடுவதற்கு வசதி செய்யாமல் இருப்பதே. ஆகையால் நாம் திட்டம்செய்யும் முறையானது பொருள்கள் எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

**விநியோகம்:—**

ஒரு நாட்டின் செல்வம் என்பது ஒரு சிலர் கையில் இருக்கும் ரொக்கப்பணம் மட்டும் அல்ல ஆனால் அது அந்நாட்டின் பெரும்பாலோரின் முக்கிய தேவைகளை எவ்வாறு பூர்த்திசெய்து கொள்ளக்கூடிய சக்தியைப்பெற்று இருக்கிறார்கள் என்பதே இவ்வாறு பார்க்கும்பொழுது ஒருதேசத்தில் கோடீசுவரர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதினால் அந்நாட்டின் செல்வம் அதிகரித்துவிட்டது என்று ஏற்படாது பங்கீடு சரியாக இல்லாததால் அவ்விதம் சிலரிடம் பொருள் திரண்டு சேர்ந்து இருக்கின்றது. இவ்வாறு பணக்காரர்களின் எண்ணிக்கை பெருகுவது தேசத்தின் வறுமையைக் குறிக்கிறது ஒரு தேசத்தினுடைய செல்வத்தைக் கணக்கிட பொதுமக்களின் பொருள் வாங்கும் திறன் எவ்வளவு என்பதைக் கவனிக்கவேண்டும். தேசத்திற்குத் தகுந்த தொழில்கள் மக்களுக்கு வாங்கும் சக்தியை அதிகப்படுத்தக்கூடிய தொழில்களாகும். சிலரிடம் பணத்தை குவியச்செய்யும் தொழில்கள் நாட்டின் நலனுக்கு உகந்ததல்ல இதன் பொருள் இயந்திர தொழிற்சாலைகள் பொருளைக் குவிப்பதற்கு உதவி செய்கிறது பணத்தைப் பெருக்கும் பங்கிட்டு அளிக்கும் குடிசைத்தொழில்கள்தான் தகுந்தவைகள். விசேஷமாக நமது நாடுபோன்ற மூலதனம் குறைவாகவும், உழைப்புச்செல்வும் அதிகமாகவும் இருக்கும் ஒரு நாட்டிற்கு இவ்வித குடிசைத்தொழில்களே தகுந்தவை. ஆகையால் நாம் ஆலோசிக்கும் பொருள் முயற்சி முறையானது பொருளைப் பரவலாக பங்கிடுவதற்கு சாதகமானதாக இருக்கவேண்டும்.

இயந்திரத் தொழில்கள் உற்பத்திமுறைகள் ஒரு சிலரிடமே செல்வத்தையும், அதிகாரத்தையும் குவிப்பதுமல்லாமல் அதை ஆரம்பிக்கவும் அதிக மூலதனம் வேண்டும். முதல் அதிகமாக வேண்டியிருப்பதனால் எல்லோராலும் அவ்விதவிதமான தொழில்கள் செய்யக்கூடியதல்ல அவைபணத்தைப் பரவச்செய்யாமல் இருப்பதனால் நமக்கு ஏற்றவை அல்ல. முதலாளித்துவ முறைகளும், ஒரு நிலைப்பட்ட உற்பத்தி முறைகளும் பணச்செறுக்கு மிகுந்துள்ள இடத்தில் நடத்தப்படலாம். நம்நாட்டில் அவ்வித பணக்குவியல் அபூர்வம், எங்கும் வறுமை படர்ந்து இருக்கின்றது நாம் நமது தினசரி வருமானத்தைக்கொண்டு வாழக்கூடிய தொழில்களையே திட்டப்படுத்த முடியும். இதன் பொருள் இம்முறை

முழுதும் நம்மக்கள் நாளுக்குநாள் உணவுக்கும் உழைப்பின் அபிவிருத்தியையும் பொருத்தும் இருக்கின்றது. கைதேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு கட்டப்பட்ட ஒரு அரண்மனையைப் பழுதுபார்க்கவும் நல்ல நிலைமையில் வைத்திருக்கவும், திறமை மிகுந்த வேலைக்காரர்கள் வேண்டும். ஆனால் மண்ணால் கட்டப்பட்ட ஒரு குடிசையை அதில் குடியிருப்பவனே தன் சொந்த உழைப்பின்மூலம் அதைப்பழுதுபார்த்து நல்ல நிலைமையில் வைத்துக்கொள்ள முடியும். முன்னால் கூறியதற்கு பொருள் மிகுதியாக வேண்டும். பின் கூறியதற்கு உழைப்பு மட்டும் இருந்தால் போதும்.

**உழைப்பின் பிரிவினை:-**

ஒரு மனிதன் செய்யும் வேலையும் அவனுடைய தினசரி கடமைகளும் சேர்ந்து அவனது பரிபூரண ஆத்மவளர்ச்சிக்கு அனுசரணையாக இருக்கவேண்டும். இயந்திரத்தொழிலில் வேலையைப் பாகங்களாகப் பிரித்து அதையே செய்து வருவது மனிதனின் ஆராயும்தன்மை குறைவதுடன் சிந்தனை சக்தியையும், நூதனமான விஷயங்களைக் கண்டுபிடிக்கும் சக்தியையும் அழித்துவிடுகிறது. பெரிய தொழிற்சாலையில் வேலைசெய்யும் தொழிலாளி அந்த இயந்திரத்தின் பல்சக்கரம் போல் திரிந்துவிடுகிறான். அவன் மனிதத்தன்மையையும், சுதந்திரமான செய்கைகளையும் இழந்துவிடுகிறான்.

நம் நாட்டுமக்கள் மிகவும் ஏழைகள் உழைப்புத்தனம் அதிகம் ஆனால் மூலதனம் மிகக்குறைவு ஒரு அஹிம்சா சமுதாயம் வருமானத்தை அடிப்படையாககொண்டு இருக்குமேயன்றி மூலதனத்தைக்கொண்டு அல்ல ஆகையால் முதல். அதிகம் தேவை இல்லாததும் மூலப்பொருள்களும், விற்பதற்கு சந்தைகள் இலகுவாக கிடைக்கக்கூடியதுமான தொழில்முறைகளையே நாம் சிந்திக்கவேண்டும். இந்த விஷயங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு வேறுவிதமான திட்டம் தயாரிப்பதால் பயனில்லை. ஆதலால்தான் நாம் தர்க்கரீதியாக மக்களுக்கு சிறிய குடிசைத்தொழில்களையே பிரதான தொழிலாக ஏற்படுத்த வேண்டுமென்ற முடிவுக்கு வருகிறோம். இவைகளுக்காகவும், இன்னும் இதர காரணங்களுக்காகவுமே ஆலைத்தொழில்கள் என்று முதல் பாகத்தில் குறிப்பிட்டோம். பொதுமக்களுக்கு ஆலைத்தொழில் உற்பத்திமுறைகளை சிபார்சு செய்யக்கூடாது.

**அஹிம்சா சுதேசி:-**

முன்பு வங்காளப் பிரிவினையிலிருந்து கிளம்பிய சுதேசி இயக்கத்திலிருந்துதான் உண்மையான பொருளாதார விருத்தி ஆரம்பித்தது அச்சமயத்தில் சுதேசி என்றது முற்றும் அரசியல் விஷயமாயிருந்தது. அதாவது விதேசிப் பொருள்களுக்குப் பதில் சுதேசிப் பொருள்கள் ஆனால் மகாத்மா ஜி இந்தியாவின் வீழ்ச்சிக்கு அரசியல் காரணங்கள் அல்ல என்பதையும், பொருளாதார விஷயங்கள்தான் என்பதை நன்கு தெரிந்துகொண்டார். ஆதலால்தான் அச்சமயம் மிகத்துச்சமாகவும், ஆனால் மிக பிரகாசமாகவும் கருதப்பட்டகதர் இயக்கத்தை மிக திடமனதுடன் மேற்கொண்டார். இது கிராம மக்களுக்கு உயிர் ஊட்டியதும் அன்றி, மக்கள் மனதில் என்றும் நிலையான ஒரு இடத்தையும் அவருக்கு ஏற்படுத்திவிட்டது. கதர் இயக்கத்தின் காரணமாக அந்நியத் துணி விலக்குச்செய்த காலத்தில் ஆங்கில ஏகாதிபத்தியத்தினால் விதிக்கப்பட்ட வரிவிகிதங்களை காட்டிலும் அதிக துன்பத்தை அளிக்கக்கூடிய அநேக அவசரச்சட்டங்களினால் ஏற்பட்ட துன்பத்தையும், சகித்துக்கொள்ள மக்கள் தெரிந்துகொண்டார்கள். இந்த கதர் இயக்கமானது மான்செஸ்டர் நகரத்தின் அடிபீடத்தை மனிதரால் செய்யப்பட்ட பீரங்கிக் குண்டுகளின் வேகத்தைவிட அதிக சக்தியுடன் அஹிம்சா முறையில் அடித்து நொறுக்கிவிட்டது.

அரசியல் சுதேசி என்பதை பொருள்களின் உற்பத்தி ஒரு குறிப்பிட்ட அரசியல் அல்லது பூகோள எல்லைக்குள் இருப்பது என்று கொள்ளலாம். ஆனால் அப்பொழுது அதற்கு நியாய நியாயவிதிகள் இல்லை. அரசியல் முறையில விதேசியை விலக்கி சுதேசியைக் கைக்கொள்ளும்பொழுது விரோதத்திற்கும், கோபத்திற்கும் இடம் உண்டாகும். அயல் வீட்டுக்காரன் செய்யும்பொருளை வாங்காமல் இருப்பது நமது சக்தியின் குறைவையே காண்பிக்கும். அரசியல் மறுப்பு யுத்தத்தில் அது கொண்டுவிடலாம். ஆனால் உண்மை சுதேசியம் அண்டை அயலார்களை பிணைத்துவைக்கிறது உண்மை சுதேசியை வாங்குவோர்களை ஒரு தர்மகர்த்தாவைப்போல் தன் கடமைகளைச் சரியாகச்செய்வதைக் காட்டுகிறது ஒரு வியாபாரப்பண்டம் கொடுத்து பணம்பெறுவதுடன்மட்டும் முடிவடைகிறதில்லை. அதனுடன்தான் அண்டை அயலார்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளையும் கொண்டிருக்கிறது. நம்மிடத்தில் மனிதரை மனிதருடன் இணைக்கும்

உண்மையான அன்பு இல்லாவிட்டால் ஆலைத்தொழிலாலோ அல்லது குடிசைக் கைத்தொழில்களாலோ என்ன ஆகும் ஜப்பான் குடிசைத் தொழில்களை அதிகமாக அபிவிருத்தி செய்து வருகிறது என்று அடிக்கடி கேள்விப்படுகிறோம். நாம் அதன் கடைசி முடிவு எல்லா மக்களின் நன்மையையும் கருதுகிறதா என்று பார்க்கவேண்டும். ஜப்பான் தன் குடிசைத் தொழில்கள் மூலம் சீனவை கொள்ளையடிக்க முயன்றால் ஒருநாளும் அதை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். சிறிது நாட்களுக்கு முன் காந்திஜி அத்தாட்சிபெருத கடைகளில் விற்கும் கதரை வாங்கவேண்டாமென்று பொதுமக்களுக்கு ஒரு அறிக்கை விடுத்தார். என்ன வித்தியாசம். பொருள்களையும் அவைகளின் விலைகளையும் பொறுத்தவரையில் எந்தவிதமான வித்தியாசமும் இரண்டு கடைகளிலும் இல்லை. ஆனல் நீதிமுறைப்படி நோக்கின் அதிக வித்தியாசம் காணப்படுகிறது அகில பாரத சர்க்கா சங்கம் நூற்போர்களுக்கு உணவிற்குப் போதிய கூலி கொடுக்கத்திட்டம் செய்திருக்கிறது. ஆகையால் சர்க்கா சங்கத்தார் அதன் விலையில் நியாயமான துணி. மற்றவை சுரண்டல் கொள்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்டதாய் மக்களுடைய துக்கத்தைப்பெற்ற கதராக இருக்கலாம். ஆகையால் குடிசைத் தொழில்களிலும் நாம் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். எவர் ஒருவர் சுத்தமானதும், நியாயமானதுமான பொருள்களை வாங்க விரும்புகிறர்களோ அதை அவர்கள் தங்களுக்கு அருகாமையில் தெரிந்த இடத்தில் உற்பத்திசெய்த பொருள்களையே வாங்கவேண்டும். இதுதான் காந்தீய முறையில் சுதேசி என்றதன் பொருள்.

**விலைகள்:-**

குடிசைத்தொழில் மூலம் செய்யப்பட்ட பொருள்களுக்கு கொடுக்கும் பணத்தில் பெரும்பாகம் அதைச் செய்யக் கூலியாகக் கொடுக்கப்படுகிறது மூலப்பொருள்களின் விலை மிகக்குறைவு. ஆனல் ஆலை உற்பத்தி பொருள்களுக்கோ வெனில் அதன் விலையில் மிகக் குறைந்த பாகமே அதை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்குச் சேருகிறது. எஞ்சிய பெரும்பாகம் முதலாளிகளுக்கும், விற்பனைச் செலவு, வாடகை இயந்திரங்கள் முதலியவைகளுக்குச் செல்லுகிறது மேல்நாட்டு உற்பத்தியாளர்களின் பொருளாதாரம் மிகக்குறைந்த விலையைக்கொண்டு ஏற்படுவது. ஆனல் விவசாய மக்களுக்கு அதிகவிலைதான் நன்மைபயக்கக் கூடியது.

குடிசைக் கைத்தொழில் பொருள்களின் அதிக விலை பணம் பரவுவதற்கு உதவியாயிருப்பதால் அம்முறை மக்களுக்கு அதிக நன்மை அளிக்கக்கூடியதாகும்

**சுய உதவி:-**

முதலாளித்துவத் தொழில்முறை அதன் உற்பத்திகளை வாங்கும் மக்கள் சுய சக்தி அற்றவர்களாக இருந்தால் தான் வளர்ச்சி பெறக்கூடும். வாங்குவோர்கள் எவ்வளவுக் கெவ்வளவு உதவியற்றவர்களாக இருக்கிறார்களோ அவ்வளவு அதன் சந்தை பலம்பெற்று இருக்கும். வாங்குவோர்களின் தொழில் திறமை முழுவதையும் அழித்துவிட ஏதுவாகிறது இருந்தாலும் முதலாளித்தத்துவ அமைப்பு வாங்குவோர்களின் தொழில் திறமையின் சமாதியின்மேல் அஸ்திவாரமிடப்பட்டிருக்கிறது. வாங்குவோர்கள் ஒவ்வொருவரும் திறமையுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்பதே குடிசைத் தொழில்களின் நோக்கம். நாம் ஒவ்வொருவரும் தொழில் திறமை உள்ளவர்களாக இருக்கவே விரும்புகிறோம்.

**பொருட்காட்சிகள்:-**

முதலாளித்துவத்தின் கீழ் விற்பனையை ஆதரிக்கவே பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றது. அதாவது உற்பத்தியைப் பெருக்கியபின் அவைகளுக்கு ஏற்ப வாங்கும் உணர்ச்சியை (தேவையை) பெருக்கவேதான். இது வண்டியைக் குதிரைக்கு முன் வைத்துக் காட்டுவது போன்றது. காந்தீய முறை பொருட்காட்சிகளை முதியோர் கல்வியின் ஒரு பகுதியாக இருந்து ஒரு பண்டம் மூலப்பொருளிலிருந்து உபயோகப்படுத்தும் பொருளாக எவ்விதம் மாறுகிறது என்பதை பல நிலைகளில் மக்களுக்கு விளக்கிக்காட்டுவதாக இருக்கிறது இவ்விதப் பொருட்காட்சிகள் தொழில் வகைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களையும் ஆயுதஉற்பத்தியில் அதன் அபிவிருத்தியையும் அந்தந்த சமயத்தில் எடுத்துக்காட்டுவதாக இருக்க வேண்டும். இவ்வித தற்காலிகப் பொருட்காட்சி சாலைகள் நிரந்தரப் பொருட்காட்சி சாலைகளாக நாளடைவில் மாற வேண்டும். முதலாளித்துவ உற்பத்தியாளர்கள் பல ஆராய்ச்சிகளைத் தாங்களே நடத்தி அதன் முடிவுகளை இரகசியமாகத் தாங்களே வைத்துக்கொண்டு அதன் உற்பத்தியில் பொருளை மாத்திரம் விற்று பொருள் சம்பாதிக்கின்றனர்.

நாம் அவ்வாறு நடக்காமல் ஆராய்ச்சியின் முடிவுகளை உற்பத்தியாளர்கள் பலரும் பொருட்காட்சிசாலைகள் மூலம் தெரிந்துகொள்ள ஏற்பாடு செய்யவேண்டும்.

வியாபார பண்டத்திற்குப் பணமும், பணத்திற்குப் பண்டமும் பரிமாறிக்கொள்வதுடன் நின்று சரிபடுகிறதில்லை. ஒருவர் ஒருபொருளை வாங்கும்பொழுது அதனுடன் அப்பொருளின் நீதிமதிப்பையும் பெறுகிறார்கள். ஒருவர் திருட்டுச் சாமான் ஒன்றை வாங்கினால் அவர் அத்திருட்டுக் குற்றத்திற்குப் பாத்தியதை உடையவராகிறார். இதுதான் பொருளின் பொறுப்பும், தர்மகர்த்தா தன்மையும் ஆகும். ஆகையால் வாங்குவோர் ஒவ்வொருவரும் தங்கள் தேவைப்பொருள்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்பட்டது என்பதைக்கண்டுகொள்ளவேண்டும். அவர் தடுக்கக்கூடிய விலையில் உள்ள பொருள்களை ஆதரிக்கும்பொழுது அவர் அந்தக்கூட்டத்தைச் சேர்ந்தவராகிவிடுகின்றார். ஆகவே வாங்குவோரின் நோக்கத்திலிருந்து அவ்விதப் பொருட்காட்சிகள் நடத்தவேண்டியது அவசியமாயிருக்கிறது. அவைகள் சரியாக அமைக்கப்பட்டால் வாங்குவோர், வாடிக்கைக்காரர்களின் கடமையைப்போதிக்கலாம். நியாயமான வழியில் செய்யப்பட்ட சாமான்களையே வாங்கவெண்டுமென்றும் கற்பித்து அவர்கள் தங்கள் கடமையை சரிவரச்செய்ய சாதகமாக இருக்கிறது.

ஒவ்வொரு மனிதரும் பொருள் உற்பத்தியிலோ அல்லது தேவையிலோ கிராமக் கைத்தொழில்களினால் செய்யப்பட்டதா என்பதை நன்கு கவனித்தல் வேண்டும். வாழ்க்கை பூரணத்துவம் உடையது. வேலையில் பாகுபாடு வேண்டும், ஆனால் வேலையைக் கண்டிப்பதும், பிரிப்பதும் ஆகிய முறைகள் முழுத்தொழும்பலுக்குச் கொண்டுவிடுகிறது. ஒரு நல்ல வேலை சாதுர்யமாகச் செய்யப்படும்பொழுது அது நாகரீகத்திற்கு உதவுகிறது. அது தனிமையின் எல்லா நலன்களையும் நல்குவதுடன் அவன் மனோசக்தியையும் விருத்திசெய்ய உதவுகிறது. பொழுதுபோக்கு, ஓய்வு, தொழில் திறமை, சிற்பத்திறமை முதலிய தொழில்களின் நலன்களை வெளிப்படுத்தக்கூடிய வகையில் பொருட்காட்சிகள் ஏற்பாடு செய்திருக்க வேண்டும். நம்மால் ஆதரிக்கப்படும் தொழில்கள் அவைகளைக் கைக்கொள்வோர்களுக்கு இவ்வித நலன்களைக் கொடுக்கக்கூடியதாய் இருக்கவேண்டும்.

**செய்யக்கூடிய வேலை:-**

பொருளாதார சீரமைப்பு பொதுமக்களின் நன்மையைக் கருதுவதாக இருக்கவேண்டும். பொதுமக்களின் நலனே தேசத்தின் இருதயத்தைப் போலவும், விநியோகமே இரத்த ஓட்டம் போலவும் இருந்து கிராமங்களுக்கு உயிர் ஊட்டவேண்டும் இந்நோக்கங்களுடனே அகில பாரத சர்க்கா சங்கமும் அகில பாரத கிராமக் கைத்தொழில் சங்கமும் வேலையைத் துவக்கி உற்பத்தியாளர்கள் தொழிலாளர்களுடன் போட்டியிட இடம் கொடுக்காமல் தொழில் முறைகளில் ஆராய்ச்சிகளையும், பரிசோதனைகளையும் செய்துவருகிறது. இதுவரையிலும் சந்தைகள் விலைகளினால் கட்டுப்பாடு செய்யப்பட்டு வந்திருக்கிறதென்றுதான் சொல்லவேண்டும். இவ்விரண்டு சங்கங்களும் மேல்நோக்காக விலையை நிர்ணயிக்காமல் வாழ்க்கைக்குப் போதிய சம்பளத்தை நிர்ணயித்து உதவிவந்திருக்கிறது. அவைகள் பொதுமக்களுடைய சுபிட்சத்திற்காகத் தொழில்களை நேர்முகமாக எடுத்துக் கொண்டிருக்கிறது. உணவு, உடை, மற்றத்தேவைகள் முதலியவைகளை அனுசரித்துக் கூலியை விருத்தி செய்தார்கள் தொழில் அவர்களுடைய உண்டிக்கும் அபிவிருத்திக்கும் தகுந்த முறையில் ஏற்படுத்தப்பட்டது.

**கோசம்ரக்ஷணை:-**

எல்லாக் கிராமக் கைத்தொழில்களுக்கும் முக்கியமான இயக்கும் சக்தி ஒன்று இல்லாமல் முடியாது. நம் வேலைகளுக்கு காலைகள், இயந்திரங்கள்போல் உதவுகின்றன. கோ சேவா சங்கம் இரண்டு வேலைகளுக்கு அதாவது இழுக்கவும், பால் கொடுக்கவும் கூடிய மிருகங்களை உற்பத்தி செய்வதில் உதவுகிறது. இதுதான் மக்களுக்கும் மாக்களுக்கும் உள்ள தொடர்பு, மற்றும் மிருகங்கள் மனிதனுக்கு அடங்கியவை என்பதையும் குறிக்கின்றது.

**சமூக சீர்திருத்தம்:-**

காந்திஜியின் திட்டங்கள் மனிதனுக்கு மனிதன் இருக்கும் தொடர்பை பாதுகாக்கக்கூடிய அநேக விஷயங்களைக்கொண்டதாயிருக்கின்றது.

**மத ஒற்றுமை:-**

ஜாதி ஒற்றுமையானது ஒரு உயிருள்ள பொருளாயிருக்கிறது. பலவித சிறுபான்மை ஜாதிகள் பெரும்பான்மை ஜாதிகளிடம் கொண்ட சந்தேகங்களை அகற்றவேண்டும். அவைகளின் உறவு ஒரு நல்ல எண்ணத்தினுல் ஆளப்பட வேண்டும்.

**தீண்டாமை:-**

மக்கள் எல்லோருடைய கௌரவத்தையும், சமத்துவத்தையும் நிலைநிறுத்தவும், ஹரிஜனங்களுக்கு இழைத்த அநீதியைப் போக்கவும் ஹரிஜன சேவாசங்கம் துவக்கப்பட்டது. அது லக்ஷக்கணக்கான நம் சோதரர்களின் சமூக கல்வி,பொருளாதார முன்னேற்றத்திற்காக சேவைசெய்து வருகின்றது.

**மதுவிலக்கு:-**

நம் தேசத்தில் உயர்ந்த குடிவகைகள்ஜாதிவித்தியாசங்களைக் காட்டாதுபோயினும் இன்னும் அநேக தாழ்த்தப்பட்டஜாதிகள் இப்பெரும் தீமையை ஓர் பழக்கமாகக்கொண்டிருக்கின்றனர். காந்தியின் திட்டத்தில் இது முக்கியமான சீர்திருத்தாம்சம்.

**சுகாதாரம்:-**

தனி ஒவ்வொருவரையும் பொருத்தவரையில் நம் மக்கள் அனைவரும் மிகவும் சுத்தமானவர்கள். ஆனுல் சமூக நிலையில் மிகவும் அசுத்தமுள்ளவர்களாக இருக்கிறோம். ஒவ்வொரு கிராமத்தையும் கிட்டநெருங்க ஆரம்பிக்கும்பொழுதே துர்க்கந்தம் வீசுகிறது. நம் கிராமங்களைப் பார்க்க நல்ல அழகுள்ள இடங்களாகச்செய்யும் விசேடமான அறிவைநாம் விருத்திசெய்யவில்லை. சுகாதாரப் பழக்கங்கள், சுகவழிகள் இவைகளின் விதிகளை நாம் நன்கு அறியாததினுல்தான் நம் இந்திய நாட்டின் மரணவிகிதம் பயங்கரமாக இருக்கிறது. இந்நிலைக்குக் காரணம் கிராமத்தின் சுகாதாரக் குறைகள் தான். கிராமவாசிகளின் சமூக பழக்கங்களில் அநேகம் கைவிட்டுவிடவேண்டியவை. கல்வி அபிவிருத்தியினுல்தான் இவைகள் மாறலாம். இது மிகவும் வேகமற்ற மார்க்கம்.

**பெண்கள்:-**

பெண்களை சரியான இடத்தில் வைப்பதே காந்திஜி யின் முயற்சியில் பெரும் பகுதியாக இருந்தது. சமுதாயத் தில் பாதியான பெண்கள் துன்பப்பட்டுக்கொண்டு இருக்கும் பொழுது ஏன் நம் வீடுகள் அனுச்சாரங்களாய் இருக்காது? சத்தியாக்கிரக இயக்கத்தின் மூலம் அநேக பெண்கள் பொது வாழ்வில் பங்கெடுக்க முன்வந்தார்கள். இருந்தாலும் இந்தப் பிரச்னை தீர்ந்தபாடில்லை. இருப்பினும் காந்திஜியின் அர சியல் திட்டம் சில பெண்மந்திரிகளை உலகத்தில் உற்பத்தி செய்திருக்கிறது.

**கல்வி:-**

கல்வி என்றால் படிப்பு என்பது பொருள். நம் தேசத்தில் ஒருசிறு தொகையினரே எழுதப்படிக்கத் தெரிந் தவர்களாக இருக்கின்றனர். நாகரீகப் படிப்பில்லாமல் இந்தப்படிப்புக்கு அர்த்தமில்லை சர்வகலாசாலைகளிலிருந்து ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் அவர்களுடைய கல்வி அவர்களின் தன்மையை விருத்திசெய்யாமல் நங்கூரமற்ற கப்பல்களைப்போன்று வாழ்க்கையில் தள்ளப்படுகிறார்கள். நாம் அவர்களை மனிதர்களாக்க விரும்பினால் நாகரீக வழியை அழகுபடுத்தவேண்டும். சிறுவர்களுக்கு ஆரம்பத்திலிருந்தே அவர்களுடைய சுற்றுப்புறத்தை அனுசரித்து வாழும் முறை யைக் கற்பிக்கவேண்டும். மூலக்கல்வி முறையிலிருந்து இது உண்டாக வேண்டும். இந்துஸ்தானி தலிமிசங்கம் இந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்யவே ஏற்படுத்தப்பட்டது. இச் சங்கத்தின் நோக்கம் மொழியின் மூலமாகக்கல்வியைப் போ திக்காமல் ஒரு தொழில் மூலமாகக்கல்வி கற்பிக்கப்படுகிறதும ன்றி பலவித பாடல்களும் அத்தொழிலின்மூலமே கற்பிக் கப்படுகிறது.

**தாய்மொழி:-**

உண்மை நாகரீகத்தை விரும்பினால் தாய்மொழி யைக் கற்கவேண்டியது அவசியம். துரதிஷ்டவசமாக நம் மில் அநேகர் பொருள் சம்பாதிக்க முதலிடுதல்போல் அந்நிய மொழியைக் கற்க வெகுகாலத்தை வீணாக்கிவிட்டோம். இது நமது வளர்ச்சியை வெகுவாகக் குறைத்துவிட்டது.

**ஹிந்துஸ்தானி:-**

இந்தியாவில் பல பாகங்களில் இருக்கும் மக்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் நன்கு தெரிந்துகொள்ள ஒரு மொழி மிகவும் அவசியமானது. இந்துஸ்தானி மிகவும் சுலபமாக புரிந்துகொள்ளக்கூடியதாக இருப்பதால் அதை பொது மொழியாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந் நாடு முழுவதும் இந்துஸ்தானியைப் பரப்புவதற்காகவே ஹிந்தி பிரசாரசபா நிருவப்பட்டிருக்கிறது.

**முடிவு:-**

காந்திஜியின் சீரிய ஆக்கவேலைத் திட்டங்களை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் முழு விபரங்களுடன் எழுதுவதற்கு முடியாத காரியம். ஆனால் நாம் தனிப்பட்டவர் சுதந்திரம் அடையும் வழியையும் நல்ல மூலப்பொருள்களையும், ஆயுதங்களையும் விஞ்ஞான சமாச்சாரங்களையும் பொது மக்களுக்கு உதவிசெய்து அவர்களுடைய பொருளாதார நிலையை விருத்திசெய்யும் முறையில் சர்க்கார் வேலைசெய்யும்வண்ணம் அரசியல் அதிகாரங்களை உபயோகப்படுத்தவும் மக்களுக்கு உதவிசெய்யவுமேதான். அயலார்களைக் கொள்ளையடிக்காமல் மக்கள் தாங்கள் சொந்தமாகவே கைத்தொழிலைக் கைக்கொள்ளத் திரும்பவேண்டும். அந்நிய தேசங்களுடன் நாகரீகத்துறையிலும், வியாபாரத்துறையிலும் முன்காலத்தைப் போலவே நாம் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அரசியல் துறையில் அல்ல.

இந்த ஒரு வழியில்தான் நாம் சமாதான வாழ்க்கை நடத்தமுடியும். மேல் நாடுகளில் சில சமூகம் அனுசரிக்கும் உயர்ந்த வாழ்க்கை நாம் அனுசரிக்க முடியாதது. நம்மிலும் தாழ்ந்தவர்களுடைய வாழ்க்கையை நசுக்காமல் நாம் எல்லா சௌகரியங்களையும் சந்தோஷத்தையும் அனுபவிக்கவேண்டும். இந்த ஒரு வழியில்தான் மக்களுக்குள் நல்ல எண்ணத்தையும், சமாதானத்தையும் அடையமுடியும். இந்த முறைகளை விரும்பாமலும் நம்மில் சிலர் இருக்கலாம். ஆனால் நாம் நினைக்கும் இதர வழிகளின் முடிவுகளைத் தீர ஆலோசித்துப் பார்க்கவேண்டும். அவைகள் நமது நோக்கங்களைப் பூர்த்திசெய்யாதுபோனால் நமக்கு வேறு வழிகள் ஒன்றும் இல்லை. இந்த காந்தீயத்திட்டத்தை நாம் கைக்கொண்டால் மக்களனைவரும் சந்தோஷம், சமாதானம், சமத்துவமாக கூடி வாழும் சமுதாயத்தை ஏற்படுத்த நல்ல வழிகாட்டியாக இருக்கும் பெருமையை இந்தியா அடையும்.

## சுருக்கம்.

### நிலையற்ற பொருளாக்கம்.

| | | |
|---|---|---|
| *பறிமுதல்* | *முயற்சி* | *கூட்டுமுறை* |
| வேட்டை இனம் சிங்கங்கள், புலிகள், குரங்குகள். | எறும்புகள், தேனீக்கள். | காட்டுப்பிராணிகள் மிருகக்கூடம், மந்தை ஓநாய்கள், யானைகள் ஆடுகள். |
| *மனிதர்-நாடோடிகள்* வேட்டைஆடுதல், மீன்பிடித்தல். | *மனிதர்—விவசாயம்* | *மனிதர்—கூட்டம்* |
| *குணங்கள்* சிரமப்படாமை, சுயநலம், ஒருமை நலம், உரிமையில் கருத்து | *குணங்கள்* சிறிதுசிரமம், உயர்ந்த குண உபயோகம், சுய நலம், ஒருமை உரிமையில் கருத்து, பொருள் சேர்க்கை, நலம் | *குணங்கள்* கூட்ட உணர்ச்சி, கட்சி உணர்வு, குணவேறுபாடு, உரிமையில் நோக்கம், இனத்திற்கு சேவை, அன்புடமை, குறிப்பிட்ட அளவு சேவை, தியாகம். |
| *நோக்கம்* | *நோக்கம்* | *நோக்கம்* |
| "உழைப்பின்றி உண்ணுதல்" | "ஒவ்வொருவனும் தனக்காக" | "சரியோ தவறோ என்தேசம்" |
| *ஜடத்துவம்* | | *சிலதத்துவம்* |

குறுகிய எண்ணம்

நோக்கம்—துரிதபலன்

இம்சையும், அழிவும்

**யுத்தம்**

## நிரந்தரப் பொருளாக்கம்.

அன்பு : உலக அமைப்பு : கடவுள் விருப்பம்.

குணங்கள்.

மனித உயர்வு, பேதமின்மை, தன்னலமறுப்பு
கடமையில் கருத்து, சேவை, தியாகம்

இயற்கைத் தனங்கள்

மனிதர்

நீர்நிலை

சக்தி

முதல்

நிதி

சேவை அடிப்படையில் தேசம்

உழைப்பு

வழங்கும் நிதிகள்

மனிதவிருத்தி, சுயமாக வெளியிடுதல், சத்தியம், கடவுள் பக்தி, பண்பு நலங்கள் நோக்கம்

"நீ முதலில் கடவுளை அடை
"உலகம்.. ......ஆத்மா

விரிந்த எண்ணம்

நோக்கம்: கடவுளிடம் ஐக்கியமாதல்

அன்பும் சமாதானமும்

நல்லெண்ணம், நாகரிகம், முன்னேற்றம்.

---

*"வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்*
*வாழிய பாரத மணித்திருநாடு"—பாரதி*

# அடுத்து வெளியீடுகள்:-

சறுக்கிவிழுந்த சமுதாயத்தை சரி செய்ய
சக்தி ஊட்டும் சமாச்சாரங்கள் !
கவர்ச்சி மிக்க கட்டுரைகள் !
உணர்ச்சி ஊட்டும் உண்மைகள் !
எழுச்சி செய்யும் எழுத்தோவியங்கள் !
எளிய விலையில் கிடைக்கும் ஏடுகள் !
தட்டி எழுப்பும் தனித்தமிழ் நடை !
விதி விதியென்ற வீணர்கள் கூச்சலை
சதி சதியென்று மதியைத்துலக்கும்.

1. விவசாயப் பிரச்னைகள்!
2. கிராமப் பொருளாதாரப் பரிசீலனை!
3. கூட்டுறவும் குடியரசும்!

"உண்மைகள் சொல்வோம்—பல
வண்மைகள் செய்வோம்"—பாரதி

## ஜெய் ஹிந்த் !

# பாரதி மறுமலர்ச்சி மலர்.

திங்கள் மலர்

வருட சந்தா ரூ. 6—0—0 தனிப்பிரதி ரூ. 0—12—

---

பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்களைக்கூறும் புத்த புதிய கலைகள் மெத்தவளருது மேற்கே, அந்த மேன்மை கலைகள் தமிழில் இல்லை. சொல்லவுங் கூடுவதில்லை. அவை சொல்லும் திறமையும் தமிழ்மொழிக்கில்லை. மெல்ல தமி ணிச்சாகும், அந்த மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கு என்று கொன்றிடல் போல் ஒருவார்த்தை இங்கு கூறத்தக தவன் கூறினன். ஆ! இந்த வசை எனக்கெய்திடலாமே எனதாருயிர் மக்காள்! சென்றிடுவீர் எட்டுதிக்கும்! கலை செல்வங்கள் யாவும் கொணர்ந்து இங்கு சேர்ப்பீர்! இந்த பழிதீரும், புகழ் ஏறிப் புவிமிசை அரியாசனத்து என் யிருப்பேன் என்ற தமிழ்த்தாயின் திருப்பாத கமலங்களுக் பிறநாட்டு சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல்வே டும் இறவாத புதுநூல்கள் தமிழ் மொழியில் இயற்ற வேண்டும், மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வ பெருமையில்லை, வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலை பெருக்கும், கவிப்பெருக்கும் மேவுமாயின் பள்ளத்தில் வீழ் திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவிகொள்வா என்று பாட்டில் தீட்டிய பாரதியின் திருப்பெயரால் திங்க தோறும் இம்மலர்கொண்டு சூட்டிப்பணிவோம். குறைந் இதழ்களுடன் இம்மலர் இருப்பினும் இனி நிறைந்த இதழ் ளுடன் மலர்ந்து அன்னை அடியினை அலங்கரிக்கும்.

**ஜெய் ஹிந்த்.**

14—1—48
வேலூர், சேலம்

T. P. ஜெகந்நாதன்,
நிர்வாகி,
பாரதி மறுமலர்ச்சி நிலையம்.

---

Printed at Model Press, TIRUPUR.